# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

மூன்றாவது துன்பத்தின் முடிவு. வாழ்வின் மேலுள்ள ஆசையையும் தன் மேலுள்ள பிரியத்தையும் ஜெயித்து மனோவிகாரங்களை வேரோடு பிடுங்கி யெறிந்ததினாலுண்டாகும் அமைதியும், தனக்குத்தானே அரசனாயிருக்கிற கீர்த்தியும், விண்ணவரிலும் மேலாக வாழும் சுகமும் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் பிறர் துயரை நீக்கி தருமஞ்செய்தல், பணிவை கூறல் முதலிய கடமைகளைச் சிறிதும் குறையின்றிச் செய்கிற தாகிய என்றும் அழியாத நிறை செல்வமும் ஆகியவை களெல்லாம் ஒருவன் அடைவானானால் அவனுக்கு அப்பொழுது துன்பம் முடிகிறது. அவனது பழய கடன்களெல்லாம் தீர்ந்து போய்விட்டன. புதிதாக ஒன்றையும் சேர்க்கவுமில்லை. ஆகையால் அவனுக்கு இனி ஜனனமரணங் கிடையாது.

நான்காவது உண்மை துன்பத்தை நீக்கும்வழி அது எல்லாருக்கும் சுலபமாயும் சமீபமாயு மிருக்கிறது. அது எண்மடங்காய நேராக அமைதிக்கும் சாந்தத்திற்கும் கொண்டு வந்து விடுகிறது. அதோ சொர்ணமயமான மேகங்களால் சூழப்பட்டு எப்பொழுதும் பனி நிலைத்திருக்கும் அம் மலைச்சிகரங்களுக்குப் போக அனேக வழிகளிருக்கின்றன. செங்குத்தான பாதைகளின் வழியாயோ, அல்லது மெதுவாகச் சரிந்திருக்கும் பாதைகளின் வழியாகவோ அச்சிகரங்களின் மேல் ஏறலாம். அனேக அபாயங்கள் பொருந்தியதாய் மலையின் மேல் நேரே ஏறுகிற முரட்டுப்பாதையில் மிகப் பல முன்னவர்களே துணிவார்கள். பல வீனர்களோ சுற்றிச் சுற்றி நடந்து அனேக விடங்களில் தங்கியே போக வேண்டும். அதுபோலவே எண்மடங்கானவழியும் உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கிறது. பலமான உயிர் விரைந்து செல்கிறது. பல வீனமான உயிரோ மெதுவாகச் செல்கிறது. ஆனால் எல்லோரும் நிச்சயமாய் ஒளிநிறைந்த சிகரங்களுக்குச் செல்வார்கள்.

அவ்வழியின் முதற்கெடி நற்கொள்கை. தருமத்திற்குப் பயந்து குற்றத்தை விலக்கி நடவுங்கள். மனிதனது விதிக்குக் காரணம் கர்மமாகையால் அதைக் கவனியுங்கள். ஐம்புலன்களுக்கு அதிபதியாயிருங்கள்.

இரண்டாவது நல்லெண்ணம். உயிர் வாழ்வனவற்றிற்கெல்லாம் நன்மையையே கோருங்கள். கொடுமையுங்கோபமும் லோபமும் மடிந்து போகட்டும். அதனால் உமது வாழ்வு இனிய கீதம் போல் எல்லாம் இசைந்து மெதுவாக ஓடும்.

மூன்றாவது நல்வசனம். அரசன் வசிக்கும் அரண்மனைக் கதவுகள்போல் உங்களது வாயைக்காத்துக்கொள்ளுங்கள். உங்களது வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் சாந்தமாயும் மெதுவாயும் ஒருவர் மனதையும் புண்படுத்தாமலுமிருக்கட்டும்.

நான்காவது நன்னடக்கை. ஒவ்வொரு செய்கையும் ஒரு குற்றத்தை அழிக்கவோ அல்லது ஒரு நன்மையை அதிகரிக்கவோ செய்யட்டும். ஜபமாலை ரத்னங்களைக் கோர்க்கும் நூல் அக்கற்களின் வழியாகத் தெரிவது போல் உங்களது செய்கைகள் ஒவ்வொன்றிலும் அன்பு விளங்கட்டும்.

மற்ற நான்கு கெடிகள் இன்னும் உயர்ந்தவைகள். இவ்வுலக விஷயங்களினின்று நீங்கினவர்கள்தான் அவைகளில் நடக்கலாம். அவைகளாவன:— நற்சுத்தம், நற்றயாளம், நல்ஏகாந்தம், நல் ஆனந்தம் என்பவைகளே.

பலமான பறவைகள்தான் தமது கூட்டை விட்டு உயரப் பறக்கின்றன. இன்னும் வளராத சிறகுகளை யுடைய சிறியகுஞ்சுகள் ஒரு கிளையினின்றும் மற்றொரு கிளைக்குத் தாவித் தாவியே போகும். அனுபவமாகாத பலவீனமான உயிர்கள் இல்லறத்திலேயே இருந்து வளரவேண்டும். மனைவி, குழந்தைகள் மேலுள்ள அன்பு அருமையான தென்று என்ன தெரியும்? உமது நேசர்களும் விளையாட்டுகளும் இனிமையாயும் தர்மங்கூடியதாயும் இருக்கின்றன. அதிலுள்ள துயரங்கள் பொய்மையானாலும் வலிமையுள்ளனவாய்த் தோற்றுகின்றன. ஆகலால் வாழவேண்டுபவர்கள் இவைகளின் மேல் எவ்வளவு நன்றாக வாழமுடியுமோ அவ்வளவு வாழட்டும். தமக்குள்ள குறைகளைக் கொஞ்சங் கொஞ்சமாக மதித்துக்கொண்டு சென்று இம்மாயங்களோடு பழகிப் பழகி சிறிது சிறிதாக உண்மையை அறிய வேண்டும். அதனால் இன்னும் அவர்கள் உயர்ந்த இடங்களுக்குப் போக சுலபமான ஏற்றங்களையும் இலகுவான பாவச்சுமைகளையும் ஐம்புலன்களின் கட்டை அறுக்க அதிக பலத்தையும் உடையவர்களாவார்கள். இவ்வாரம்பத்திற்கு வந்தவர்கள் முதற்படியை அடைகிறார்கள். அவர்களுக்கு நான்கு மேன்மையான உண்மைகளும் எண்மடங்கு வழியும் தெரியும். அவர்கள் இன்னும் சில ஜன்மங்களில் நிர்வாணத்தை அடைவார்கள்.

இரண்டாம்படியில் நிற்பவர்கள் சந்தேகங்களை ஒழித்து, மனோவிகாரங்களினின்றும் நீங்கி காயங்கள் அணுகாத உயர்ந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் ஒரு ஜன்மந்தான் எடுப்பார்கள்.

இதற்கும் உயர்ந்தது மூன்றாவது படி. அதை அடைந்தவர்கள் பரிசுத்தமுடையவர்களாய் எல்லா உயிர்களையும் சமமாகப் பார்ப்பவர்களாகிறார்கள். அவர்க்கினி ஜனன மரணங்கிடையா. அவர்களை வாழ்வோடு சேர்த்துக்கொள்ளக் கூடிய பந்தம் அறுந்துபோய்விட்டது. இதிலும் உயர்ந்தவர்கள் கடைசிப்படியை அடைந்தவர்கள். அவர்கள் தான் புத்தர்கள்.

இப்படி நான்காவது படியை அடைந்தவன் சென்றவழியில் ஒரு வீரனால் கொல்லப்பட்ட மிருகங்கள் போல் பத்துப் பாபங்கள் இறந்து கிடக்கின்றன. அவைதன்னயம், பாராட்டுங்குணம், கெட்ட கொள்கை, சந்தேகம், பகை, காமம், வாழ்வின்மேல் ஆசை, சுவர்க்காசை, டம்பம், மோகம், கர்வம் என்பன. அதோ நிற்கும் வெள்ளைச்சிகரங்களை அடைந்தவன் தனக்கு மேல் நிர்மலமான ஆகாயத்தைத் தவிர வேறொன்றும் இல்லாமல் நிற்பதுபோல் இவனுக்கு மேல் நிர்வாணத்தைத் தவிர வேறொன்றுமில்லை. தேவர்கள் தமது தாழ்ந்த இடங்களிலிருந்து அவனைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். மூவுலகும் இடிந்து விழுந்தாலும் அவனை அசைக்க முடியாது. அவன் வாழவேண்டுவதெல்லாம் வாழ்ந்து, இறக்கவேண்டுவதெல்லாம் இறந்து தீர்த்துவிட்டான்.

கர்மத்தினால் அவனுக்குப் புதிய வீடுகள்உண்டாக மாட்டா. அவனுக்கு விருப்பம் ஒன்றுமில்லையாதலால் எல்லாம் கிடைத்து விடுகிறது. தான் என்பதை மறந்ததினால் பிரபஞ்சம் முழுவதும் தானேயாகிறான். நிர்வாணமென்பது எல்லாம் அழிவது என்று சொல்பவர் அறிந்தவரல்லர். நிர்வாணமென்பது வாழ்வென்று சொல்பவரும் அறிந்தவரல்லர். அவர்கள் மங்கிய லாந்தரைப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள் போல் சிறிது தூரமே பார்க்கிறார்கள்.

இந்த தர்மமாகிய திரவியம் உலகத்தின் செல்வங்கள் எல்லாவற்றிலும் மேலானது. ஒப்புவமையில்லாமல் இனியது. அதன்படி நடக்க ஐந்து விதிகளைக் கேளுங்கள்.

[தொடரும்.]

---

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-6வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரிதை வருமாறு:-

எனக்குத் தொழிலில் நல்ல சம்பாத்தியம் கிடைத்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் அதில் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. என்னுடைய வாழ்க்கையின் ஆடம்பரத் தன்மையைக் குறைத்துக்கொண்டு, என்னுடைய சகோதரர்களுக்கு என்னாலியன்ற சேவையைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் எப்பொழுதும் என் அகக்கண் முன் நின்று கொண்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு குஷ்டரோகி என்னிடம் வந்து சேர்ந்தார். அவருக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டு அனுப்பி விடுவதில் என் மனம் திருப்தியடையவில்லை; ஆகையால் அவரை என்னுடைய வீட்டிலேயே தங்கியிருக்கச் சொன்னேன். அவருக்கு சிசுருஷை செய்து வந்தேன். ஆனால் ஒரு எல்லையில்லாமல் எப்பொழுதும் அவ்விதம் நான் செய்துவர முடியவில்லை. அவ்விதம் செய்துவர எனக்கு ஒழிவுமிருக்கவில்லை. அவரை எப்பொழுதும் என்னுடன் வைத்திருக்கவும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே ஒப்பந்தக் கூலிகளுக்காக ஏற்பட்டிருந்த கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிக்கு அவரை அனுப்பினேன்.

என்மனம் நிம்மதியில்லாமலே யிருந்தது. சாசுவதமான ஜீவகாருண்ய வேலை எதையேனும் செய்ய வேண்டுமென்ற அவா எனக்கேற்பட்டது. டாக்டர் பூத் என்பவர் செயிண்ட் எயிடன் மிஷன் தலைவராக விருந்தார். அவர் நல்ல மனதுள்ளவர். பிணியாளிகளுக்கு இலவசமாக சிகிச்சைசெய்து வந்தார். பார்ஸி ரஸ்டோம்ஜீயின் தாம சொத்துக்களிலிருந்து டாக்டர் பூத்தின் மேல்விசாரணையில் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவது சாத்தியமாயிற்று. இந்த ஆஸ்பத்திரியில் சிசுருஷை செய்யவேண்டுமென்ற அவா எனக் கேற்பட்டது. பிணியாளிக்கு மருந்து கொடுக்க தினம் இரண்டொருமணி நேரம் வேண்டியிருந்தது. எனது ஆபீஸ் நேரத்தைக் குறைத்துக்கொண்டு இந்த ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர் வேலை செய்துவரத் தீர்மானித்தேன். வக்கீல் தொழிலில் என்னுடைய வீட்டிலிருந்து கொண்டே நான் செய்யும் வேலை அதிகமிருந்தது. சொத்துப் போக்குவரத்துவக்கீல்களைச்சொல்லும் வேலையும், மத்தியஸ்த வேலைகளும் தான் எனக்கதிகமாக இருந்தன. மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும் எனக்கு சில கேஸ்கள் வருவதுண்டு. அவைகளில் அதிகத் தகாராறு இருக்காது. நான் கோர்ட்டுக்கு வராத நேரங்களில் என்னுடைய வேலைகளையும் சேர்த்துப்பார்த்துக்கொள்ள என்னுடன் தென்னாப்பிரிக்காவிற்கு வந்திருந்த ஜனுப் கான் ஒப்புக்கொண்டிருந்தார். ஆகையால் ஆஸ்பத்திரியில் வேலை செய்ய எனக்கு அவகாசமிருந்தது. ஆஸ்பத்திரிக்குப் போய்வரும் நேரத்தைத் தவிர தினம் இரண்டுமணி நேரம் ஆஸ்பத்திரியில் வேலையிருந்தது. இந்த வேலையைச் செய்துவந்ததில் என் மனம் சிறிது சாந்தியடைந்தது. பிணியாளிகளுடைய உபாதைகளின்னவையென்று தெரிந்துகொண்டு அந்த விவரத்தை வைத்தியருக்கு அறிவித்து அவர் சொல்லுகிறபடி மருந்து கொடுத்துவந்தேன். இதனால் ஒப்பந்தக்கூலிகளாகிய இந்தியர்களுடன் நான் நெருங்கிப்பழகசந்தர்ப்பம் வாய்த்தது. போயர் யுத்த காலத்தில் காயம் பட்டவர்களுக்கும், பிணியாளிகளுக்கும் சிசுருஷை செய்ய நான் முன் வந்தபோது இந்த ஆஸ்பத்திரியில் எனக்கு ஏற்பட்டிருந்த அனுபவம் உபயோகமாக விருந்தது.

குழந்தைகளை முன்னுக்குக்கொண்டு வரும் விஷயம் எப்பொழுதும் என் மனதிலிருந்து கொண்டிருந்தது. தென்னாப்பிரிக்காவில் எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. அவர்களைச்சரியாக வளர்ப்பதற்கு ஆஸ்பத்திரியில் நான் செய்துவந்த ஊழியம் உபயோகமாக விருந்தது. நான் சுயேச்சை புத்தியுடையவனாக விருந்து எப்பொழுதும் என்னை சோதனைக்குட்படுத்திக்கொண்டிருந்தது. என்னுடைய சம்சாரம் பிரசவிக்கையில் தகுந்த வைத்திய உதவியைத்தேடிக் கொள்ளுவதென்று நானும் என் சம்சாரமும் முடிவு செய்துகொண்டோம். ஆனால் வைத்தியரும், தாதியும் சமயத்தில் மோசம் செய்துவிட்டால் என்ன செய்வது? தவிரவும், தாதியோ இந்திய ஸ்திரீயாக விருக்கவேண்டும். தென்னாப்பிரிக்காவில் தேர்ந்த இந்திய தாதி கிடைப்பது கஷ்டம். ஆகவே சுகப்பிரஸவத்தைப்பற்றி டாக்டர் திருபுவனதாஸ் எழுதியிருந்த புத்தகத்தை நான் படித்துத் தெரிந்துகொண்டு, அதில் கண்டபடியும், எனக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அனுபவத்தை ஒட்டியும் என்னுடைய குழந்தைகளை நான் சவரக்ஷணை செய்து வந்தேன். பிரசவ சமயத்தில் இரண்டு மாத காலத்திற்குத் தாதியை வைத்துக் கொள்ளுவதுண்டு. அவளை என்னுடைய சமசாரத்திற்கு உதவியாக விடுவதே தவிர குழந்தைகளை அவளிடம் விடுவதில்லை.

கடைசிக் குழந்தை பிறந்தபோது தான் எனக்குப் பெரிய சோதனை காலம் ஏற்பட்டுவிட்டது. திடீரென்று என் சம்சாரத்திற்கு இடுப்புவலி எடுத்துவிட்டது. வைத்தியர் உடனே கிடைக்கவில்லை. மருத்துவச்சி வந்து சேருவதற்கும் காலதாமதமாகிவிட்டது. அவள் என் வீட்டில் இருந்திருந்தாலும் சுகப்பிரஸவமாகச் செய்திருக்க முடியாது. குழந்தை சரியாகப் பிறக்கும்படி நான் பார்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. டாக்டர் திருபுவனதாஸின் புத்தகத்தை நான் சரியாகப் படித்திருந்தது எனக்குப்பரம அனுகூலமாக இருந்தது. எனக்குக் கொஞ்சமகூட பயம் ஏற்படவில்லை. குழந்தைகள் சரியாக வளர்ந்து வருவதற்கு பெற்றோர்கள் சிசுசவரக்ஷணை விஷயத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த விஷயங்களை நான் தெரிந்து கொண்டிருந்தது ஒவ்வொரு சமயத்திலும் எனக்குப் பரம உபகாரமாக விருந்தது. நான் இந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டு, என்னுடைய குழந்தைகளைச் சரியாக சவரக்ஷணை செய்திராவிட்டால் அவர்கள் இப்பொழுதிருப்பதுபோல் திடசரீரிகளாக இருக்க மாட்டார்கள். குழந்தை பிறந்து 5 வருஷகாலமாகும் வரையில் அது தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை யென்று நாம் நினைத்திருக்கிறோம். ஆனால் பிறந்து 5-வருஷங்களுக்குள் குழந்தைகள் தெரிந்து கொள்ளுவதுபோல் பிற்காலத்தில் தெரிந்துகொள்வதில்லை. கர்ப்பம் தரித்தது முதல் அது கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறது. கர்ப்பம் தரிக்கும் காலத்தில் பெற்றோர்களிருந்து வரும் சரீர மனோ நிலைமை சிசுவினிடம் பிரதிபிம்பிக்கிறது. கர்ப்ப காலத்தில் தாயினுடைய மனோபாவதசாலும் வழிகளாலும் குழந்தையின்மாறுதலேற்படுகிறது. பிறந்த பிறகும் குழந்தை பெற்றோர்களுடைய வழியையே பின்பற்றுகிறது. பிறகு வெகுகாலம் வரையில் குழந்தையானது வளர்ச்சிக்கு பெற்றோரையே நம்பியிருக்கிறது.

இந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டுள்ள தம்பதிகள் கேவலம் மிருக ஆசையைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக சம்போகத்தை விரும்ப மாட்டார்கள். குழந்தை வேண்டுமென்ற ஆவலுதிக்கையிலேயே அவர்கள் கூடுவார்கள். தூக்கம், சாப்பாடு இவைகளைப் போல் ஸ்திரீ புருஷ சமஸர்க்கமும் அவசியமென்று நினைப்பது அறியாமையேயாகும். உலகம் உஜ்ஜீவித்திருப்பது பிரஜோற்பத்தியைப் பொறுத்திருக்கிறது. உலகமானது கடவுளுடைய திருவிளையாடல் ஸ்தலமாதலால் பிரஜோற்பத்தியானது உலகின் ஒழுங்கான அபிவிருத்திக்கு ஏற்றவாறு வரையறுக்கப்படவேண்டும். இதை உணர்ந்தவர்கள் மிருக ஆசையை அடக்கிக்கொண்டு, தங்களுடைய குழந்தைகளின் சரீர, பாரமார்த்திக, மனோ வளர்ச்சிக்கு அவசியமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு அந்த ஞானத்தைத் தங்களுடைய சந்ததிகளுக்கு உபயோகமான வழியில் உபயோகிப்பார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பிராமணரல்லாதார் முன்னேற்ற சாதனங்கள்.

( முன் தொடர்ச்சி )

பாருங்கள்! பார்ப்பனர்களுக்குள் எத்தனையோ ஜாதிப் பிரிவுகள் இருந்த போதிலும் பிராமணரல்லாதாரைத் தாக்குற விஷயத்தில் அவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து கொள்கின்றனர். அதுபோல் நமக்குள் எவ்வளவுதான் பிரிவுகள் இருந்த போதிலும் பிராமணர்கள் நம்மை எதிர்க்கும் சமயம் நாமும் ஒன்று சேர்ந்து கொள்ளவேண்டும். அவ்விதம் சேராமையினாலேயே நாட்டில் அநேகர் பிரிவும் பிளவுபட வப் நேரிட்டது. பிராமணரல்லாதார் என்ற நல்லியக்கம், நமக்குள்ளாகவே தாழ்ந்து கிடக்கும் சகோதரர்களை கை தூக்கி விடுவதிலேயே முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும். நமக்குள் பலதாப்பட்டியமின் இருக்கவே கூடாது. ஒரு நாயுடுவுக்கு—ஒரு பிள்ளைக்கு—எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை ஓர் ஆதித்திராவிடர் சிறுவனுக்கும் இருக்கவேண்டும். அதற்காகவே முதன் முதல் நமது இயக்கம் பாடுபட வேண்டும். நம் எல்லோரையும் ஒன்றுபடுத்துவதற்கு அதுவே சிறந்த வழியாகும். அப்படியானால் தான் நமது லக்ஷியம் கைகூடும்.

பிராமணர்களை வீணாகத் தூஷிக்கக் கூடாது. ஏனெனில் அந்த ஜாதியினரிலும் நமது இந்த நேர்வழிக்கு வரக்கூடிய புத்திமான்கள் பலர் இருக்கின்றனர். இது சமயம் நாம் நமது வார்த்தைகளை அன்புமயமாக வெளியிடுவோமானால் அவர்களும் நம் மீது அனுதாபப்பட்டு நமது இயக்கத்தில் வந்து சேர்வார்கள். நமது வார்த்தைகள் விபரீதமாக இருக்குமானால் அது அவர்களை வெருட்டுவதாகும். மேலும், நமக்குள்ளேயே ஒழுங்குக்கு வராதவர் பலரிருக்கையில் இவர்களை ஒழுங்குக்குக் கொண்டுவருவதற்குள்ளாக பிராமணர்களைக் குற்றங்காட்டிப் பேசுவதிற் பிரயோஜனமில்லை. ஆகையினாலேயே நமக்குள்ளாகவே முதன் முதலாகச் சீர்திருத்தத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் மாறி மாறிச் சொல்லிவருகிறேன்.

இவ்விதமாக நமக்குள்ளிருக்கும் பாகுபாடுகளை யொழித்து பிராமணரல்லாதார் என்ற ஒரு சமூக ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்த பின் பிராமணர்களிடம் சமத்துவத்துக்காகப் போராட வேண்டும்.

பிராமணரல்லாதார் இயக்கம் பிராமணர்களை நம் வழிக்குக் கொண்டுவர வேண்டும். எந்த விதமான துறையிலும் பிராமணர்களுக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ அவ்வளவு உரிமையும் பிராமணரல்லாதாருக்கும் உண்டென்று நிரூபித்துக் காட்ட வேண்டும். ஆகையால் பிராமணரல்லாதார் மஹாநாட்டை அடிக்கடி கூட்டவேண்டும். ஜில்லா தோறும், தாலுகா தோறும், கிராமந்தோறும் சங்கங்கள் நிறுவ வேண்டும். குருகுலம், ஆரியசமாஜம் முதலியவைகளை ஸ்தாபிக்க வேண்டும். வரதக்ஷிணை வாங்கும் வழக்கம், பாலிய விவாகம் முதலியவைகளை அடியோடு ஒழித்து தாய் பாஷையைக் கட்டாயக் கல்வியாக ஏற்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் ஒழுங்கு பார்ப்பதற்கு பிரசாரகர்கள் வெளியேற வேண்டும். தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் இது சமயம் தூங்கிக்கொண்டிருக்கக் கூடாது. அவர்கள் திரிகரண சுத்தியோடு வெளியேறி உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்ய வேண்டும். அவர்களே கிராமத்து ஜனங்களைத் தட்டியெழுப்ப வேண்டும். ஜனங்களும், பத்திரிகைகளும் அவர்களுக்கு உற்சாகம் காட்ட வேண்டும். சட்டசபைகளில் நமக்காகப் போராடக் கூடிய நமது பிரதிநிதிகளையே தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டும். காங்கிரஸிலே கட்டும், இராஜாங்க சேவையிலாகட்டும் பார்ப்பனர் என்று சொல்லிக் கொண்டு நமக்கு எதிரிகளாயிருப்பவர்களைத் தோற்கடித்தே தீரவேண்டும்.

சென்னை மாகாணம் பிராமணரல்லாதார் ஆட்சிக்குள் இருப்பதாகப் பிரதிநிதியாய் பிரமை கொள்ளுமட்டுமல்லாமல் நாம் தமிழ் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். விவசாயம், வியாபாரம், தொழில் முறை, கல்வி, செல்வம், பத்திரிகை, நாட்டியம், ஸையான்ஸ், சுதேசிப் பொருட்களையே உபயோகித்தல் முதலிய பல துறைகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். இவ்விதம் வெற்றி பெறுவதினாலேயே பார்ப்பனர்களுக்கும் நமக்கும் பரஸ்பர அன்பு வளரும். பல வழிகளிலும் அவர்களிடம் கலந்து நின்று முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்வதினாலேயே நமக்கும் அவர்களுக்கும் இருக்கும் துவேஷம் ஒழியும். நம் வழிக்கு அவர்களை இழுத்துக் கொள்வது நம் கருத்தாயிருக்க வேண்டுமேயொழிய அவர்களின் வஞ்சக வார்த்தைக் கட்டுப்பட்டு அவர்களின் வழிக்கு நமது கருத்தை விட்டுக் கொடுத்து விடக் கூடாது. இது விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். பிராமணர்களிடத்தில் நம்மவர் செலுத்திவரும் கட்டளை காணிக்கைகளை நிறுத்த வேண்டும். அவர்களைக்கண்டு சாமி என்று சொல்லும் வாயைப் பொத்த வேண்டும். எந்தப் பிராமணனாவது, எந்தப் பிராமணன் பத்திரிகையாவது நம்மைச் சூத்திர ஜாதி என்று சொல்லிவந்தால் சொல்லிய வாயை அடக்க வேண்டும்.

நமது இயக்கம், பிறப்பினால் நான் பிராமணன் என்று எவன் சொல்வானோ அவனுக்கு அறிவுறுத்தி பிறப்பினால் ஜாதி கிடையாதெனப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.

மகாத்மாவின் ஆசார சீர்திருத்தங்களைத் தைத் கொண்டு இதற்கு முன்னுள்ள அறிவீனமான சடங்குகளையும், அநாவசியமான செலவுகளையும் நிறுத்த வேண்டும்.

நமது ஔவைப்பிராட்டியார் ஜாதியிரண்டொழிய வேறில்லை என்றார். அந்த இரண்டு ஜாதி எங்குளது? என்ற கேள்விக்குப் பதில் கூறுங்கால் அந்த இரண்டு ஜாதியுங்கூட நீதி வழுவா நெறி முறையில் தான் உண்டு. மற்றப்படி ஜாதியே கிடையாது. இந்த மேதினியில் நீதி வழுவாத நெறி முறையிலேயே இரண்டு ஜாதி உண்டென்றால் அந்த இரண்டு ஜாதி தான் யாது? என்றால் இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர் என்பதே. இதுவே பட்டாங்கில் உள்ளபடியாகும். இத்தகைய ஜாதி என்ற கனியை நமது பிற்காலத்திய இந்திய மக்கள் நமது வம்சவழி திராவிட மக்களாவது பறித்துப் புசித்துக் களித்து நம்மைப் புகழும்படியாக நாம் இப்பொழுதே ஒற்றுமை என்ற விதையை விதைத்து இன் சொல் என்ற உரமிட்டு அன்பென்ற நீர் பாய்ச்சி பிராமணரல்லாதார் என்ற மரத்தை வளர்த்து சகோதரத் தத்துவம் என்ற மலரை மலரச் செய்து பார்த்து மகிழ்வோமாக. இவ்வளவு பக்குவமாக இந்த மரத்தை நாம் வளர்க்கவில்லையானால் மரத்தில் மலரையாவது ஒரு சில இலைகளையாவது நாம் காண முடியாது. அவைகளை வஞ்சகம், துவேஷம், பொறாமை என்ற வெட்டுக் கிளிகளும், பூச்சி புழுக்களும் அரித்துக் கொண்டுபோய் விடும். ஆகையினால் சத்தியத்துக்குப் பயந்து மனம் வாக்கு காயம் ஒன்றுபட நாம் வேலை செய்ய வேண்டும். இவ்வாறு நாம் செய்கையில் நமது அரும் பெரும் முயற்சியினால் பிராமணர் முதலிய பலருமே நம்முடன் சேர்ந்து கொண்டால் நாம் நமது காலத்திலேயே முன் சொன்ன கனியைப் புசித்து அதன் பலனாய் சுதந்திரம் என்ற வச்சிர தேகத்தைப் பெற்று சிரஞ்சீவியாக வாழலாம். ஆகையால் பிராமணரல்லாத வாலிபர்களே! எழுமின்!! உழைமின்!!! ஈசன் அருள் பாலிப்பார்.

அ. ப. ஆதித்தர்.
காயாமொழி.

---

## தூத்துக்குடி ஷண்முகவேல் வாசகசாலை.

இவ்வாசகசாலையின் விசேஷ அங்கத்தினர் கூட்டம் ஒன்று காளத அக்ஷய ஞூ தை மீ 4வ் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீமான் அ. ச. மாயக்காளை நாடார் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது.

ஸ்ரீமான்களான தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் தலைவராகவும், அ. ச. மாயக்காளை நாடார் உப தலைவராகவும், அ. து. கலியாணசுந்தரமும், மு. பெ. மாரியப்ப நாடாரும் காரியதரிசிகளாகவும், நா. அ. ச. தாயுமானசுவாமி நாடார், எஸ். எஸ். செல்லையப்ப நாடார் கணக்குப் பரிசோதகர்களாவும், அரி. அ.ச. துரைச்சாமி நாடார் கௌரவ குப்ரண்டைஸர் ஆகவும் நியமிக்கப் பெற்றனர். நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக உத்தியோகஸ்தர்கள் உள்பட பதினொருவர் தெரிந்தெடுக்கப்பெற்றனர்.

அவைத்தலைவரவர்களுக்குவந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

இவ்வாசகசாலையின் தர்க்க சங்கக் கூட்டமொன்று 23-1-27-ல் மகா-ள-ள-ஸ்ரீ அரி. அ. சு. துரைச்சாமிநாடார் அவர்கள் அவைத்தலைமையின் கீழ்நடைபெற்றது. அவ்வமயம் "புலால் மறுத்தல்" என்னும் பொருள் பற்றி உபன்னியாசரூபமாக தர்க்கம் நடைபெற்றது. வந்தனோபசாரம் கூறப்பட்டு சபைஇனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## தமிழ் வைத்திய சங்கச் சித்த வைத்திய 3-வது மகாநாடு கண்காட்சி.

1927 ஞூ ஏப்பிரல் மீ 10, 11, 12,13,14 உ களில் சென்னை வைத்தியம் வளர்ச்சிமுறை மந்திரி ஹானரபில் திவான்பகதூர், கனம் ஆர். யன். ஆரோக்கியசாமி முதலியார் பி. ஏ. பி. யி., யம். யல். ஸி. அவர்கள் தலைமையில் மூன்றாவது மகாநாடு கண்காட்சிகள் மதுரையில் நடைபெறும். மதராஸ் இந்திய மருத்துவ கலாசாலை பிரின்ஸிபால் டாக்டர். கெப்டன் ஸ்ரீநிவாசமூர்த்தி பி. ஏ. பி. யல்., யம். பி. ஸி. யம். அவர்கள் மருந்துக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்கள். மூப்பூப் பரிசோதனையும், வரையுரை ஆராய்ச்சியும், பிரசங்கமும் நடைபெறும். பட்டங்களும் வழங்கப் பெறும். கண்காட்சி சந்தா ரூ 3. டெலிகேட்சந்தா ரூ 1. கண்காட்சி மட்டும் டிக்கெட் அணா 8. வேண்டிய விபரங்களுக்கு அமைச்சருக்கு எழுதிக்கொள்ள வேண்டும். வைத்தியர்களும் வைத்தியாபிமானிகளும் தவறாமல் வரும்படி இச்சங்கம் வேண்டுகிறது.

வி. சிவஞானயோகி,
தானப்ப முதலியார் அக்கிரகாரம்,
மதுரை.

---

## விழிப்புநிலை.

காலச்சக்கரம் அதிவேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கிறது. காரணமின்றிக் காரியமில்லை என்பது. சுயராஜ்யக்கக்ஷியின் மாபெரும் தலைவர் ஸி. ஆர். தாஸ் ஜெயசீலராய் கவர்ன்மெண்டுக்கு சமாதான நிபந்தனையை வற்புறுத்திக் கொண்டிருந்த நிலைமையில் மண்ணுலகினின்றும் பிரிக்கப்பட்டதும், முக்கிய சந்தர்ப்பமான தற்காலத்தில் சிரத்தானந்தஸ்வாமிகள் கொலையுண்டு பிரிக்கப்பட்டதும் தெய்வ சம்மதமாயின் எதற்காக வென்று யாரால் யூகிக்கமுடியும்? பிறநாடுகளில் நம்மவர் துன்புறும் பரிதாபகரமும் இந்நாட்டு மக்களில் தீண்டத்தகாதவராய் ஒதுக்கப் பட்டிருக்கும் லக்ஷக்கணக்கான மக்களின் ஹிருதயத் துடிப்பும் வீணாகுமா? ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தி அரசாளும் உரிமை சகிக்கத்தகாதெனக்கூறும் அரசியல் வாதிகள் வேதங்களில் ஆதாரமற்றதும் நியாயத்திற்கு ஒவ்வாததும் கொடுமையானதுமான வர்ணாச்சிரம கொடுமையையும், ஆலயம் நுழைந்து சாவடிப்பாதை இவற்றின் தீண்டாமையைக் கையாளும் விசித்திர பேதபுத்தியையும் இதுவரைகண்டும் கேட்டும் செய்துவருகின்றனரல்லவா? இவ்வகை பேதபுத்திகிருக்கை கொடுக்குங்கால மட்டும் நம் பாத்தியதையை தன்னாட்டிலேயே கொண்டாட சாத்தியமில்லை. கால வரையறையில்லாதவிதமாய் நம் இந்தியாவிற்கு அரசியல் விஷயத்திலும் மதவிஷயத்திலும் இக்கஷ்டம் நேர்ந்ததற்கு வேறுமென்ன தான் காரணம் உண்டு? ஒற்றுமைக் குறைவும் அருமையும் தன்னலமும் அன்றோ! தீண்டாமை இன்னும் பேர் சொல்லிக் கொண்டிருக்கிறது. இவ்வருஷத்திய காங்கிரஸ் மகாசபையிலும் வெளிநாடுகளிலும் இதன் ஒலி எட்டிவிட்டது. பிராமணரல்லாதாரென்ற பிரிவு சாஸ்வதமாகி பள்ளமான தமேடாகக்கூடியதுதான் என்பதுபோல் திருப்பி வாசிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிடும்போல் காண்கிறது. இதுவேளை பிராமண சமூகம் மௌனம் சாதித்துக்கொண்டிருந்தலைக்காட்டிலும் எங்களுக்குத் துவேஷமில்லை; சமாசபுத்திகாட்டத் தயாரென்று ஆங்காங்கு கூட்டம் கூடி ஸ்பஷ்டமாய் ஏன் சொல்லி ஹிந்துமத சாபத்தை விலக்க முன்வரக் கூடாது? அன்றி இக்கக்ஷி வளர்ந்துகொண்டே போதல் நலமா?

சுப்ரமண்ய சேர்வை,
திருமங்கலம்,

---

## கட்டாயப்படிப்பு.

11-6-26ல் மதுரை முனிஸிபாலிட்டி 15, 16-வது வார்டுகளிலுள்ள மகமதியரல்லாத 6 முதல் 11-வயதுடைய பையன்களுக்கும் 8 முதல் 13-வயதுடைய மகமதியப் பையன்களுக்கும் கட்டாயக்கல்வி ஏற்படுத்த வேண்டுமாறு சபையில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஷ வார்டுகளிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் ஷ பையன்களுக்கு 1-4-27 முதல் சம்பளம் வாங்கவும் கூடாதாம்.

---

ஏமாந்துவிடாதீர்கள்! உடனே எழுதுங்கள்!!
உங்கள் நன்மையைக் கோரிவுதயமான

**இரங்கூன் இரகசியம்.**

(ஓர் இனிய தமிழ் நாவல்.)

200-பக்கங்கள்; அழகான ராப்பர் பைண்டு செய்தது.
விலை ரூபாய் 1—0—0. வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.

---

பால்யநாடார் சங்கப்பாட்டு.

நாடார்குல மக்களின் நலத்தைக்கோரி தற்கால நவீனக முறையில் எழுதியது. 70 பக்கங்கள், இரண்டு ஆப்டோன்படங்கள் உள்ளன. விலை அணா 0—8—0. சொற்ப்பிரதிகளே கைவசம். ஆர்டருக்கு முந்துங்கள்.

விலாசம்:—
பஞ்ச சக்தி புத்தகசாலை,
63 நெ. 29-வது வீதி, ரயில்வே பிளாக்,
இரங்கூன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார் குலமித்திரன்
அக்ஷய ௵ தை மீ ௰௮ ௳

# சீனாவில் போராட்டம்.

ஆசியாக் கண்டத்தில் இந்தியாவும், சீனாவுமே மிகப்பிரதானமானதும், சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க மகாபெரிய தேசங்களுமாகும். இந்தியாவைப்போல் சீனா ஜனநெருக்குடையதும் செல்வவளப்பமுள்ளதுமாகும். இந்தியா அந்நியராட்சிக்குட்பட்டிருப்பது போல் சீனா உட்படவில்லை யென்றாலும், ஐரோப்பியரும், அமெரிக்கரும் அதிக ஆதிக்கம் பெற்று சீனாவை ஒரு வழியில் அடிமைப் படுத்திக் கொண்டுவிட்டார்கள். பல வருஷங்களுக்கு முன்னடந்த பாக்ஸர் கலகத்தில் சீனாவில் பல தேசத்தவர்களும் பல பாகங்களை தங்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டு அவர்களின் செல்வங்களை யெல்லாம் சுரண்டிக் கொண்டு போனார்கள். சீனர் அபினியை அதிகமாயுபயோகித்து வருவதினாலே தங்களுடைய தேசத்தில் அந்நிய ஆதிக்கம் எப்படி வளர்கிறது; ஏன் அவர்கள் நம் நாட்டை விட்டு வந்து குவிகிறார்களென்பதில் கவனம் வைக்கவில்லை. ஐரோப்பியருக்கோ அறியாத ஜனங்களை ஆள அதிகப் பிரியம். சீனா அபினி மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டால் ஐரோப்பியருக்கு ஆபத்தென்பது நன்றாய்த் தெரியும். ஐரோப்பாவுக்கு மஞ்சள் (மஞ்சள் வர்ணமுடைய சீனர்) ஆபத்து என்று ஜெர்மன் தேசத்து ராஜீய நிபுணர் முன்பே எழுதிவைத்திருக்கின்றார். அவ்வாபத்து வராமலிருப்பதற்கு ஐரோப்பா ஒற்றுமையாக விருந்து வர வேண்டுமென்றே அவர் கருதியிருக்கலாம். சீனாவுக்கும், ஜப்பானுக்கும் யுத்தம் ஏற்பட்டு ஜப்பான் ஜெயித்து சீனாவில் பிடித்துக் கொண்ட சில பாகங்களை ஜப்பான் அனுபவிக்கக் கூடாதென்று ஐரோப்பிய தேசங்கள் தடுத்து விட்ட காரணமும், முன்னேற்றமடைந்த ஜப்பான் கூட்டுறவு சீனாவுக்கு ஏற்பட்டால் தங்களுக்கு ஆபத்துண்டாகுமென்பதுந்தான். இவ்வாறு பக்கத்திலுள்ள ஜப்பான் தயவையுங்கூட எதிர்பாராமல் ஐரோப்பியர் சகாயத்தையே நம்பியிருந்தது. ஐரோப்பா மகா யுத்தத்திலும் நேச ராஜ்யங்களுக்குத் தன்னாலான எல்லா உதவியும் செய்தே வந்தது. அவ்வுதவிக்கேற்றவாறு தங்கள் பால் நேச ராஜ்யங்கள் நடந்து கொள்ளவில்லையென்றும், சீனா சர்வ தேசங்களையும் போல் பல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்றுள்ள கொள்கை பலப்பட்டு அனுவஸ்யமாய் அந்நியர் தங்கள் நாட்டில் வசித்து வருவது தங்களுடைய நாட்டுக்கே [illegible] வரையும் வெளியேற்றும் போராட்டத்தை சீனர் இப்போது ஆரம்பித்து விட்டார்கள்.

ஆங்கு சுமார் 16000 ஆங்கிலேயர்கள் வசிக்கின்றார்கள் அவர்களுக்குத்தான் அதிகக் கஷ்டமிருக்கிறதென்றும், அவர்களைத்தான் அதிகமாய்க் கஷ்டப்படுத்துகிறார்களென்றும் சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் பிரஜைகள் தங்கள் வாசஸ்தலங்களைக் காலி செய்து வருகிறார்கள். அவர்கள் உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க அங்குள்ள பிரிட்டிஷ் கடற்படைகள் போதாமல் லண்டனிலிருந்து படைகள் புறப்பட்டுப் போகின்றன. இந்தியப்படைகளும் அனுப்ப ஏற்பாடாகி விட்டது. இந்தியப் படைகளை இந்தியச் சட்டசபையின் அனுமதி கேட்காமல் எப்படி அனுப்பலாமென்று இந்தியாவில் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மற்றெல்லாத் தேசங்களும் சீனா விஷயத்தில் பிரிட்டிஷார் நடந்து கொள்வது நியாயமாயிருக்கவேண்டுமென்று எடுத்துக்காட்டி வருகின்றன. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும் படையனுப்பவாவது, பிரிட்டிஷாருக்கு இது சம்பந்தமாக உதவி செய்யவாவது மறுக்கின்றன. என்றாலும், ஐயர் வரும் வரையும் அப்பு சும்மாயிராதென்பதுபோல் பிரிட்டிஷார் பொறுத்திருக்க மாட்டார்கள். அவர்களுடைய படைகளெல்லாம் அதிக வேகமாய் சீனாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. இப்போராட்டம் எப்படி முடியுமென்பதை எல்லோரும் எதிர் பார்க்கக்கூடும்.

சர்வ ஜீவதயாபரன் சர்வலோகங்களையும் சர்வ ஜீவர்களும் நன்குவதற்கே படைப்பித்திருக்கிறார் என்றாலும் தன்னது என்று ஒருவர் சுதந்திரம் பாராட்டும் போது என்னுது என்ற எதிர்ப்புகள் தானாகவே உண்டாகின்றன. அஃதுண்டாகாவண்ணம் சிலர்கள் ஆத்ம ஞானமடைந்து விட்டால் உலகத்தில் வேற்றுமைகளுண்டாகாது. அதற்கேற்ற ஞானத்தைப் போதிக்கும் மகாத்மாக்கள் சொல்லை உலகம் எப்போதும் ஒப்புவதில்லை. தற்போது மகாத்மா காந்தியடிகள் சொல்லும் உலக சமாதான உபதேசத்தை யார் ஒப்புக்கொள்கின்றனர்? ஒப்பாதவரையும் தப்பான காரியங்கள் சாதாரணமாக நடப்பதைத் தடுப்பது சாத்தியமாகா. மனிதர் வாழ்க்கை யுத்தத்தில் மூழ்கி ஒருவரை யொருவர் கொன்று ஜீவிப்பதுதானா வென்று யோசித்துப்பார்க்கட்டும்.

# குறிப்புகள்.

## ஏரல் தை அமாவாசை.

தாம்பிரவர்ணி நதி தீரத்தின் அருகாமையில் ஏரல் மாநகரின் கண்ணே ஜெகஜ்ஜோதியாய்த் திருவிளையாடல் புரிந்துவரும் ஸ்ரீமத் அருணாசலேஸ்வராலயத்திற்கு வரும் தை மீ 20௳ அமாவாசைத் திருநாளை முன்னிட்டு நாலாபக்கங்களினின்றும் பக்தகோடிகள் அவனருள்நாடிச்செல்வார்களென்பதில் யாது ஐயப்பாடுளது? திருநாள் வைபவமும் வெகு கீர்த்தியாய்க் கொண்டாடப் பெறுதலான் அங்கு யாத்திரைசெல்வார் அனைவரும் பிரமானந்த மெய்துவரென்பதில் சங்கையின்று. பாரமார்த்திக நோக்கொடு அப்பரம் பொருளின் பதம்பெற விழைந்து செல்லும் நங்குலமக்கள் இல்லௌகிகமாய உலகிற்கும் வேண்டும் நற்சாதனங்களையடையும் மார்க்கந்தேடி ஒவ்வொரு ஆடி, தை அமாவாசைகள் தோறும் ஜாதியக்கூட்டம் ஆங்கு நடைபெற்று வந்திருப்பதேபோல் இம்முறையும் மகாநாடு நடைபெறுதற்கான முன்னேற்பாடுகள் ஆங்குறையும் அபிமானிகள் செய்வார்களென்று நம்புகிறோம். யாத்திரையார்த்தமாகவும் மகாநாடுகூடுமிடத்தே வைகுவார்த்தமாகவும் வருவோரும் அபிமானிகளும் தலைவர்களும் சமூக முன்னேற்றங்குறித்த சொற்பொழிவு நிகழ்த்துவர்கள். ஆகையான் ஆண்டவனிடம் வேண்டும் வரம் பெறவும் அறிஞர்கள் வாயிலான் அதற்குரிய மார்க்கங்களைச் செவிமடுக்கவும் நாடார்குல மக்களனைவரும் ஆங்குற வேண்டுகின்றோம்.

## பால்ய நாடார்கள் வாசக புஸ்தகசாலை.

சாத்தான்குடியிலுறையும் நாடார் குல பாலகர்களின் பெரும் முயற்சியால் 14—5—19ல் ஸ்தாபிக்கப்பெற்று பல கஷ்டங்களுக்கிடையில் 14—11—23ல் சொந்தமாக ஓர் கட்டடம் கட்டி முடிவடைந்து சகல காலமாய் விழிப்புடன் கொண்டு நடைபெற்றுவரும் இவ்வாசகசாலை அபிமானிகளின் விடா முயற்சியை பெரிதும் பாராட்டுகின்றோம். 30-12-26ல் நடைபெற்ற ஆண்டு விழாவின் போது வெளியிடப்பட்ட அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதுபோல் தம்மளவிற்கு ரூபாய் 450 வரை நிதிபாகத் திரட்டியிருப்பது சந்தோஷிக்கத் தக்கதே. ஆன்றோர் அபிமானிகளும் பெரியோர்களும் இவ்விஷயத்தில விசேஷ அபிமானம் காட்டி நிதியைப் பெருக்கி பயன் பெறத் தக்கதும் உலகவியல்களை அறிவுறுத்தும் திறமுடைத்தமான புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் விசேஷமாய்த் தருவழைத்து நமக்கும் நாட்டிற்கும் நன்மை நல்க வேண்டுமென்றோம்.

## இந்தியா சட்டசபை.

டில்லியில் இந்தியா சட்டசபை, ராஜாங்கசபை, சமஸ்தான மன்னர் மகாசபை ஆகிய மூன்றுங்கூடுவதற்கேற்ப புதிய முறையில் கோடிக் கணக்காகச் செலவு செய்து கட்டி முடித்த கட்டடத்தை இராஜப் பிரதிநிதி லார்டு இர்வின் திறந்துவைத்து சக்கிரவர்த்தியின் சந்தோஷச்செய்தியைப் படித்தார். இந்து முஸ்லீம்கள் பலர் இந்திய ஏகாதிபத்தியத்திற்குத் தலை நகராய் வைத்திருக்கும் டில்லி நகரிலேயே இந்தியப்பார்லிமெண்டு ஏற்பட்டிருப்பதும் லார்டு இர்வின் அதை திறந்துவைத்திருப்பதும் இந்திய சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 19௳ முதல் நாள் கூட்டத்தில் அங்கத்தினர் ராஜ விஸ்வாசப் பிரமாண மெடுத்துக்கொண்டவுடன் தலைவர் தேர்தல் நடந்தது. ஸ்ரீமான் படேல் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்ற தேர்தலில் எதிர்த்தவர்களும் அவரை இம்முறை ஆதரித்தார்களானால் அவருடைய யோக்கியதை எவ்வளவு மாசற்றதாயிருந்திருக்க வேண்டும்! அவருடைய ஜெயத்தை சுயராஜ்யக்கட்சியார் தங்கள் ஜெயமென்று பெருமைகொள்வதில் பிரயோசனமில்லை அவருடைய நிதான குணத்தைத் தாங்களும்உடையவர்களாக முயற்சித்தலே சாலவும் நன்று.

சபைகளைத்தோய்ந்த வேலைகளில் தலைவர்கள் ஒன்றுகூடி கவர்னமெண்டைக் கட்டுப்பாடாயிருந்து முட்டுக்கட்டை போடுவதற்கு ஒரு கூட்டுக் கட்சி அமைக்கப்பார்க்கிறார்கள். சென்ற மூன்று வருஷங்களில கட்டுப்பாடாயிருந்து முட்டுக்கட்டை போட்டு என்ன பலனடைந்தோமென்று இன்னும் யோசனையில்லாமல் முயலுவது ஆச்சரியமே!

2-ம் நாளில், ஜெயிலிலிருந்தே தேர்தலில வெற்றிபெற்ற ஸ்ரீமான் சத்தியேந்திரநாத் மித்ராவை சபைக்குவர முடியாமற் செய்துவைத்திருப்பதைப் பற்றி கண்டித்துப் பண்டிதநேரு ஓர் தீர்மானங்கொண்டுவந்தார். தலைவரும் தலையசைத்தார். சபையும் ஆட்சேபனையுடன் அங்கீகரித்துக்கொண்டது. இதனால் யாருக்கேனும் பிரயோசனமுண்டா? பெருமையுண்டா? நிறைவேறிவிட்ட எல்லாதீர்மானங்களும் அமுலுக்குவந்துவிடுமா? மித்ராவை விட்டுவிடுவார்களா? விட்டுவிட்டாலும் பண்டிதர் தீர்மானத்திலிருந்து தானென்று பெருமையடைய முடியுமா? எதனவே வங்காளக் கைதிகளை யெப்படி விடுவிக்கலாமென்று கவர்ன்மெண்டு யோசித்துக்கொண்டிருப்பதாக ஒரு வதந்தி பலமாயிருந்து வருகிறது. எப்படியும் விடுக்கத்தான் போகிறார்கள் மழையும் பெய்தது; சுவரும் இடிந்தது; கிழவியும் செத்தாள் என்பதுபோல் பண்டிதருக்கு ஒரு பெருமை வந்தாலும் வரலாம்.

உபதலைவருக்கு ஒரு பலமான போட்டி நடக்கும்போலத் தெரிகிறது. எந்தெந்தக் கமிட்டியில் யார்யாரைக் குக்கலைவைக்கலாமென்ற பார்வைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தென்னாப்பிரிக்காவுக்குத் தூது சென்ற ஸ்ரீமான் சாஸ்திரியாருக்கு சபையில் காலியாயிருக்கும் ஒரு ஸ்தானத்தில் நியமனங் கிடைத்து விட்டதாகத் தெரியவருகிறது.

சபை திங்கட்கிழமை வரையும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் தம் தம கட்சிக்குப் பலந்தேடும் வேலையைத் தாராளமாய்ச் செய்து கொண்டிருக்கிறார். கவர்ன்மெண்டும் அதன் வேலையைச் செய்துகொண்டு தானிருக்கும். பட்டம் பதவியாசைகளையெல்லாம் மட்டந்தட்டி விடுமென்பதில் சந்தேகமுண்டோ?

# அதிபர் சுற்றுப்பிரயாணம்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

நமது அதிபரவர்களும், நண்பர் எஸ். சர்க்கரைப் பாண்டியரும் நமது மித்திரன் க்ஷேம அபிவிர்த்தியைக் குறித்த தமிழ் நாட்டு வடபாகங்களுக்கு 6—1—27-ல் பிரயாணமானார்கள். 7௳ ஈரோடு குடியரசு ஆபீசுக்குச் சென்று ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்களைக் கண்டுபேசினார்கள். குடியரசு ஆசிரியர் நமது ஆசிரியரை உபசரித்து தமது கிரஹத்தில் விருந்து நடத்தி இரு ஆசிரியர்களும் அன்பு மேலீட்டால் அளாவளாவிக்கொண்டார்கள். இருவரும் ஆங்கு முதன் முதலாகச் சந்தித்த ஞாபகார்த்தமாக ஓர் உருவப்படம் வேண்டுமென நமது ஆசிரியர் கேட்டதற்கிணங்க குடியரசு ஆசிரியரும் தமது உருவப்படமொன்றை அன்புடன் கொடுத்தார்கள்.

மறுநாள் குடியரசு ஆசிரியர் தமையனார் ஈ. வி. கிருஷ்ணசாமிநாயக்கரவர்கள் கிரஹத்திலும் ஓர் விருந்து நடத்தி நமது ஆசிரியரை வழியனுப்பி வைத்தார்கள்.

ஆசிரியர் தம்சகாவுடன் சேலம் பொம்மிடியில் தமது கிளை வர்த்தக சாலையில் 4 தினங்கள் தங்கியிருந்து அங்குள்ள வேலைகளை முடித்துக்கொண்டு 14௳ காலை சென்னைக்குப் பிரயாணமானார்கள். சென்னையில் 6 நாள் தங்கி பல சகா நேயர்களையும் சில முக்கியஸ்தர்களையும் கண்டு பேசினார்கள். எல்லோரும் மித்திரன் க்ஷேமத்திற்கு தக்கஉதவி செய்வதாகவே வாக்களித்திருக்கிறார்கள். நண்பர் எஸ். டீ. ஆதித்தன் பி. ஏ. பி. எல். அவர்கள் ஸ்ரீமான்கள் எஸ். வி. சண்முகநாடார், ஷை கம்பெனி மானேஜர் ஸ்ரீநிவாசநாடார், ச. சு. சங்கரலிங்க நாடார், வைத்திலிங்கநாடார், க்ஷத்திரியமித்திரன் அதிபர், நத்தவாக்கம் அழகு சுந்தரநாடார் முதலியவர்களும் மற்றும் பலரும் அதிபரவர்களின் முயற்சிக்கு பெரிதும் ஒத்தாசைசெய்தார்களென்பது குறிப்பிடத்தக்கது. நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் நமது அதிபரை உபசரித்து அவர்களால் இயன்ற உதவியும் செய்தனுப்பினார்கள்.

20௳ சென்னையைவிட்டு புறப்பட்டு 21௳ இரவு தமது சகாவுடன் திருவாரூர் வந்து சேர்ந்தனர். மறுநாட்காலையில் ஸ்ரீமான் நல்லகருப்பநாடாரவர்கள் மளிகை மேன்மாடியில் அவ்வூர் நாடார் கூட்டுறவுச்சங்கப் பிரசிடெண்டு ஸ்ரீமான் சாமிநாதநாடாரவர்கள் சங்க சார்பாக தர்மாலையும் சங்கத்தின் அங்கத்தினர் சார்பாகவும் பால்யநாடார்களின் சார்பாகவும் அதிபரவர்களுக்கும் சர்க்கரைப்பாண்டியருக்கும் மா

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஜா ஆரங்கள் சூட்டி வரவேற்ற உபசரிக்க வந்திருந்த கூட்டத்தாருக்கும் சந்தனம் தாம்பூலம் கற்கண்டு பழம் வழங்கி இவ்வூருக்கு குல சேவை புரியும் பெரியார் விஜயஞ்செய்ததும் நாங்கள் வரவேற்று உபசாரஞ்செய்ததும் இதுவே முதல் தடவையாகுமெனக் குறிப்பிட்டு மித்திரனுக்கு வேண்டிய உதவி செய்வதாகவும் வாக்களித்தார்கள். அப்போது அதிபர் உபசாரம் செய்த அனைவருக்கும் வந்தனம் செலுத்தி தமக்கு மரியாதையாகக் கொடுத்த பலமாலைகளில் மணமும் புகழும் வாடாத மாலை கதர்மாலையேயென்றும் ஆசையால் எல்லோரும் கதராடையையே கட்டவேண்டுமென்று குறிப்பிட்டார் அவ்வமயம் அதிபருடன் 25 வருஷங்களுக்கு முன் பாலிய சிநேகமாயிருந்த விஜயகமூர்த்தி நாடாரைக் கண்டு ஒருவரை ஒருவர் உறவு கொண்டு அன்பு பாராட்டிக்கொண்டதாகும் குறிப்பிடத்தக்கது.

மறுநாள் நாகை, நாகூர், வெளிப்பாளையம், காரைக்கால், திருநகலூர், கூத்தாநலூர் முதலிய விடங்களுக்குப் போய் ஆங்காங்குள்ள மித்திரன் அபிமானிகள் பலரைக் கண்டு உறவாடிவிட்டு மீண்டும் திருவாரூர் வந்து அதிபரின் ஆசிரியர் உடுமலை சரபம் முத்துச்சாமிக்கவிராயரவர்களை சுமார் 2 வருஷத்திற்கு முன்பாக சமயமிடைந்த விடத்தைக்கண்டு தெரிசனை செய்து 24உ மாயவரம் வந்து பிராமணரல்லாதார் நலவுரிமைச் சங்கத்தின் சார்பில் காவிரிமதகிலிலை கூடிய கூட்டத்திற்கு விஜயஞ்செய்து பிரசங்க மாரிபொழிந்த ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமிநாயக்கரவர்களைக்கண்டு முகமன் கூறி விடைபெற்றுகொண்டு மறுதினம் கும்பகோணம் வந்துசேர்ந்தார்கள். நாடார் முதலிய பிராமணரல்லாத பெருஞ் ஜனங்களுடன் காலை அதிபரும் மாலை 7 மணிக்கு திருவிடமருதூருக்கடுத்த திருபுவனம் சென்று ஆங்கு நடந்தேறிய திராவிட வாலிப சங்கத்தின் திறப்புவிழாவில் கலந்து கொண்டனர். அன்று தவ்லூர் பெருமான் கோவில் மண்டபத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் ஈ. வி. ராமசாமிநாயக்கர், எஸ். தண்டபாணி பிள்ளை, பவானிசங், ஸ்ரீமதி மீனாக்ஷித்தாயம்மாள் முதலிய பெருந்தலைவர்கள் சுயமரியாதையைப்பற்றி அரும்பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவ்வமயம் ஆகுள்ளார்வின் விருப்பத்திற்கிணங்கி நம் அதிபரும் பிறப்புரிமையைப்பற்றிப் பேசினார்கள். அவ்வைபவம் முடிந்ததும் கும்பகோணம் வந்து 2 நாள் தங்கி ஸ்ரீமான்கள் தங்கவேலநாடார், சக்திவீர நாடார், பெரியதம்பி நாடார், "விருதுநகர் நாடார் லாட்ஜ்" தலைவர் முதலியவர்களைக்கண்டு பேசி திருச்சி வந்துசேர்ந்தனர். சில அவசர காரியார்த்தமாக ஊர் வரவேண்டிய நேர்ப்பட்டமையால் கோயமுத்தூர், சேலம் ஆகிய ஜில்லாக்களில் பிரயாணஞ்செய்ய சந்தர்ப்பமின்றி திருச்சியில் சில முக்கியஸ்தர்களைக்கண்டு பேசி வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு 29-1-27-ல் தமது வாசஸ்தலமாகிய அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தார்கள்.

---

## திருச்செந்தூர்.

இந்நகரில் தக்ஷண மாற நாடார்களால் அமைக்கப்பெற்றிருக்கும் கல்மண்டபத்தில் தைப்பூசத்தன்று நாடார்குல மக்கள் ஏராளமாய் கூடியிருந்தனர். அதில் யானும் ஒருவன். வழக்கப்படி காணிக்கை வாங்குவதென்பதும், தீபங்களேற்றி ஜனங்களுக்கு சௌகரியங்கள் செய்து கொடுப்பதென்பதும், மண்டபத்தை செப்பனிடுவதென்பதுமில்லாமல் கவனிப்பாரற்றுக் கிடப்பதாய்த் தெரிகிறது. ஆயிரக்கணக்காய் முன் காலத்தில் பணச்செலவு செய்து கட்டப்பட்ட கட்டடங்கள் யாதொரு பிரயோஜனத்திற்கும் அருகதையாகக் கொள்ளாதிருக்கும் நிலைமையை நோக்குவது பெரிது விசனிக்கத்தக்கதென்பதை யார்தான் ஒப்பார். ஆகையால் தலைவர்களும் சீமான்களும் இவ்விஷயத்தில் கவலையெடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சு. பு. மா. வெள்ளையநாடார்,
தோப்புக்குளம்.

---

## அபிப்பிராயம்.

தற்போது நமது சங்கத்தின் முக்கிய வேலைகளில் எவ்விதம் ஸ்காலர்ஷிப் பண்டை விருத்திபண்ணுவது என்பது ஒன்றாகும். இதைக்குறித்து பலரும் பலவித அபிப்பிராயங்களை மித்திரன் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். எல்லாவித அபிப்பிராயங்களும் நிதியை விருத்திசெய்யும் நோக்கத்தோடே வெளிவந்திருப்பினும், எது முக்கியம் என்ற முடிவுக்கு வாராதிருப்பதுதான் ஆலோசனையிலிருப்பது. இப்படி சிற்சிலருடைய அபிப்பிராயங்களை மட்டும் மித்திரன் மூலம் வெளியிடுவது போதாது. இதுவிஷயத்தில் நமது சங்கம் வெகு ஜாக்கிரதையுடனும் விழிப்புடனும் பின் இது விஷயமாய் எவ்விதக்குறைவும் பொது ஜனங்களால் கூறப்படாதபடி நடந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்கு ஒரு வழியுண்டு. நமது ஜன சமூகத்திலுள்ள எல்லா முக்கியஸ்தர்களுடைய (பெரிய மனிதர்களுடைய) அபிப்பிராயங்களை வோட்மூலம் அறிந்து பெரும் பாலோருடைய அபிப்பிராயம் எதுவோ அதன் பிரகாரம் நடத்திக்கொள்வதுதான் நமது சங்கத்திற்கு பெருமை. ஜன சமூகத்தின் பெரியோர்களுடைய அபிப்பிராயங்களை எல்லாரையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டியோ ஒன்று கூட்ட சாத்தியப்படாது என்று கண்டால் தபால் மூலமாயோ அறிந்துகொள்ள வேண்டியது.

இதற்கிடையில் எனது அபிப்பிராயத்தையும் வெளியிட மறந்துபோக மாட்டேன். பெரும்பாலோருடைய அபிப்பிராயம் நிதியை பாங்கில் போடுவதென இருக்குமாகில் நமது நாடார் பாங்குதான் ஏற்றதென நான்சொல்ல மாட்டேன். இதனால் ஏதோ நான் நமது நாடார்பாங்குக்கு விரோதமாய்ச் சொன்னதாக நேயர்கள் நினைக்க வேண்டாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்திய ஐக்கியநாணய சங்க பாங்கு ஒன்று இருந்துவருகிறது. அதில் நமது மூலதனத்தை வட்டிக்கு விடுவோமானால் இதர பாங்கில் கிடைக்கக் கூடிய வட்டியை விட கூடுதலான வட்டி கிடைக்கும். 100-க்கு 8 வீதம் பெற்றுக்கொள்ளலாம். பணமும் அதிக பத்திரமாயிருக்கும். நமது பணத்தைப்பற்றி கவலையே வேண்டாம். நமது பணம் விருத்தியாவதோடு கூட எத்தனையோ பேர்கள் நமது பணத்தின் மூலம் விவசாயத்திலோ, வியாபாரத்திலோ, கைத்தொழிலிலோ இன்னும் இதர விஷயங்களிலோ முன்னுக்கு வர ஏதுவுண்டு. பொது ஜனங்களின் நன்மைக்காக நமது பணத்தை சர்க்கார் பாங்கியில் போட்டிருப்பதால் காருண்ய கவர்ன்மெண்டாரும் நமது சங்கத்தை மிகவும் கண்ணியமாகவும் பெருமையாகவும் நினைக்க ஏதுவுண்டு. வருஷம் ஓர் முறை மார்ச்சு மீ 31 தெய்தியன்று நமது பண்டிற்குரிய வட்டியை பெற்றுக்கொண்டு ஏழைமாணவர்கட்கு உதவி புரியலாம்.

சுமார் 50000 ரூ இந்த பாங்கியில் போடுவதென்றால் வருஷத்திற்கு 4000 ரூ வட்டி கிடைக்கும். இவ்வளவு ரூபாயையும் நாம் ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டியதிராது. எவ்வளவு வேண்டியதோ அவ்வளவு எடுத்துக் கொண்டு மீதியை உடனே முந்திய முதலோடு சேர்த்து ஏப்ரல் மீ 1உ வட்டிக்கு போட்டுவிடலாம். மூலதனமும் விருத்தியாகிக் கொண்டேவரும். இதற்கு வேறே சிப்பந்திகளும் கணக்கப்பிள்ளைகளும் வேண்டாம். சங்கத்தார் கணக்கை மட்டும் சரிபார்த்து வந்தால் போதுமானது.

சிலர் அபிப்பிராயப்படி மதுரையில் கட்டடங்கள் வாங்கிவிடுவதானால் சிப்பந்திகள் கணக்கப்பிள்ளைகளின் சம்பளமும் கட்டட ரிப்பேரும் முனிசிப்பல் தீர்வைகளும் எதிர்பாராத அநேக விதமான செலவுகளும் ஏற்படுவதோடு நமது சங்கத்திற்கும் அதிக பொறுப்பான வேலைகள் ஏற்பட்டுவிடும். அப்படியே மாதம் ரூ 30 வாடகை கிடைக்கக்கூடிய 10 கட்டடங்கள் வாங்கினாலும் வருஷம் ஒன்றுக்கு 3600 ரூ கிடைக்கும். இதில் வேலைக்காரரின் சம்பளமும் ரிப்பேர் செலவும் போக எவ்வளவுதான் கைசேரும் என்பதை நேராய் அறிந்துகொள்ளலாம். ஆகையால் நமது பணத்தை இந்திய ஐக்ய நாணயச்சங்கபாங்கியில் போடுவது தான் உசிதமென நம்புகிறேன்.

எஸ். செந்தாஸன், உபாத்தியாயர்,
சமுகரெங்கபுரம்.

---

## ஸ்ரீமான் மா, வே. ஷண்முகவேல் நாடார் அவர்களின் ஞாபகார்த்த வாசகசாலை, காமைப்பேட்டை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா 16—1—27-ல் சிறந்த வழக்கறிஞரும், சென்னை சட்டசபை அங்கத்தினரும், மந்திரி கனம் காரியதரிசியும், சென்னை சர்வகலாசாலையின் நிதிக் காப்பாளரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றவருமான ஸ்ரீமான் தானியேல் தாமஸ் நாடார் பி. ஏ., எம். எல். ஸி. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

உபசாரணைக் கமிட்டித் தலைவரும், காரைப்பேட்டை தர்மபரிபாலன சங்கத்தின் அதிபதியுமான ஸ்ரீமான் அ. துரைச்சாமி நாடார் புஷ்பஹாரஞ்சூட்டி களிப்புடன் தலைவரை ஸ்டேஷனில் வரவேற்று பெரும் ஜனத்திரளினிடையே ஊர்வலமாகவந்து காமைப்பேட்டை சபா மண்டபத்திற்கு அழைத்து வந்ததும் கடவுள் வணக்கம் பாடப்பெற்று நடவடிக்கை ஆரம்பமாயிற்று.

தலைவரவர்களுக்கு வரவேற்புப் பத்திரமும், பாக்களும் வாசித்துக் கொடுக்கப்பெற்றதும் காரியதரிசி அறிக்கைப் பத்திரம் படித்தார்.

பின்னர் அவைத் தலைவர் நாட்டின் முற்போக்கிற்கான நிலைமைக்கும் கல்வியாலாயபயன் இன்னதென மக்கள் அறிந்து பெரும்பயன் அடைதற்கும் இன்றியமையாத சாதனமாக இருப்பது வாசகசாலைகள் தான் என்றும், சரித்திர பூர்வமாக பெரியார் ஷண்முகவேல் நாடார் மரித்து விட்டாரெனினும், அவரது ஆத்மா இன்று நமது மத்தியில் இயங்கிக் கொண்டிருப்பதாயும் சொல்லி வாசகசாலையின் லட்சியத்தைப்பற்றி மீண்டும் விரிவாக எடுத்து உரைத்தார்கள். பண்டிதர் ஸ்ரீமான் டி. மாசிலாமணி நாடார் அவர்கள் ஆண்மை என்னும் பொருள் பற்றி உபந்யாசம் புரியும் போது, ஆண்மை என்பது ஆங்கில ஆசாரத்தைப் பின்பற்றி தலை ரோமத்தை கத்தரித்து, மீசையை அரையாக்கி, கால் சட்டை அணிந்து, கழுத்தில் சுருக்கு போட்டுக்கட்டி, தலையில் பெரிய தொப்பி வைத்து, உயர் சுருட்டு பிடித்து, சைகிளிலோ மோட்டார்களிலோ செல்வதுதான் ஆண்மை என ஜனங்கள் ஏமாறுவதாகவும், விடாமுயற்சியும், எடுத்த காரியங்கள் நன்கு முடிவு பெறும் வண்ணம் இடையில் எத்தகைய முட்டுக் கட்டை ஏற்பட்டாலும், சங்கடங்கள் ஏற்பட்டாலும் ஊக்கத்துடன் சலியாமல் நின்று முடித்துக் காட்டி வெற்றியடைவதுமே ஆண்மையென்றும், வெறும் வேசமும், கோழைத்தன்மையும், தன் மனதில் உள்ள லட்சியங்களை விட்டுக் கொடுத்து எல்லோருக்கும் தலை அசைக்கும்சுபாவமும்ஆண்மை அல்லவென்றும், இப்போது நாம் ஆண்மையற்றவாழ்வையே நடத்துகின்றோம் என்றும், ஆறாயிரம் மைல்களுக் கப்பால் உள்ள ஒரு வகுப்பார் சொல்லுகிறபடி எல்லாம் தலை அசைத்துவிட்டு அடிமை வாழ்வு வாழ்கிறோம் என்றும், நமது மானத்தைக் காப்பதற்குக்கூட அந்நிய தேசத்தினரை எதிர் பார்ப்பது பேடித்தனம் என்றும், சுய மரியாதை யற்று பயனற்ற வாழ்வு நடத்துபவன் ஏதும் அடையான் எனவும், ஆண்மை இல்லாத விடத்து மனிதத் தன்மையே நீங்கிவிடும் என்றும் எடுத்தோதினர்.

இரண்டாவதாக "பாதுகா பட்டாபிசேகம்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீமான் எஸ். கே. நாராயண அய்யங்கார் அவர்களும், வாசகசாலை என்னும் பொருள்பற்றி ஸ்ரீமான் ஆ. அருள்தங்கையா அவர்களும் நிறைந்த கருத்தோடும் வாசகசாலை என்பது அறிவைப் பெருக்கும் சாலை, அதில் மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாகிய கதரை அபிவிர்த்தி செய்ய வேண்டும் என்றும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கடைசியாக ஸ்ரீமதி எஸ்தர் ராஜமாணிக்கம் சாமுவேல் பி. ஏ. எல். டி. குழந்தை வளர்ப்பு என்னும் பொருள் பற்றிப் பின்வருமாறு பேசினார்கள்:—

தாயின் நன்முயற்சியால் சகலசௌந்தரியங்களும் பொருந்திய அறிவுள்ள குழந்தையைப் பெறலாம் என்பதே தமது கருத்து எனவும், சந்தான உற்பத்திக்குரிய நான் கற்றறிந்த சில விதிகளை எடுத்துச் சொன்னால் மாதா பிதா அனைவோருக்கும் பிரயோஜனமாகும் சகல சௌந்தரியங்களும், புத்திக் கூர்மையும், ஆண்மையும் பொருந்திய பிள்ளைகளைப் பெற்று வாழ்வார்கள் என நம்பியே உபந்யாசிப்பதாகவும் கூறி பாரதத்தில் அர்ச்சுனன் பாரியாகிய சுபத்திரையின் வயிற்றில் அபிமன்யு இருக்கும்போதே ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வீரப்பிரதாபமான போர்க் கோலங்களையே சுபத்திரைக்கு உபதேசித்தார் என எடுத்துக் காட்டி அவ்வுபதேசத்தாலேயே அபிமன்யு பிறந்து வளர்ந்து பராக்கிரமசாலியாகிய எதிரிகளுக்கு அஞ்சாதவனும், பயம் இன்னதென அறியாதவனுமிருந்தான் என்றும், தாயின் தன்மையே பிண்டத்தில் தாவுகிறதென்றும், கர்ப்பிணியாக இருக்கப்பட்ட ஸ்திரீகளைப்படையும் வண்ணம் ஓயாத வேலை செய்து தேகத்தை இளைத்துப்போகும்படி செய்து விட்டால் குழந்தை வளர்ப்பதற்குரிய ஜீவசத்துக்கள் அவளது திரேகத்தில் குறைந்து அவளுக்குப் பிறக்கும் குழந்தை நாளுக்கு நாள் நலிந்துபோகும் என்றும், ஆகையால் தாய்மாரெல்லாம் நிறை கர்ப்பிணியாக இருக்கும்போது நிதானமாக திரேகத்தைப் பாதிக்காத வேலைகளையே செய்து காலங்கழிக்க வேண்டும் என்றும், எப்பொழுதும் தெய்வ சிந்தனையோடும், சதாசந்த புத்தியோடும், சிரித்த முகத்தோடும் இருப்பின், பிறக்கும் குழந்தை திறமை, ஊக்கம், விடாமுயற்சி, பெருந்தன்மை, தர்மசிந்தனையுடையதாகும் எனவும், இதுவே பெரியார்களின் முடிவு என்றும் கூறி, பிள்ளைகளின் தேகப்பயிற்சியைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லி முடித்தார்கள். பின்னர் வாசகசாலையின் ஆண்டு நிறைவுவிழா வைபவத்திற்கு வர இயலாமைக்கு வருந்துவதாகவும், மங்களகரமாக விழா நடைபெற்று நீடித்த காலம் சிறப்பாய் நடைபெற அருள் புரிய ஆண்டவனை வேண்டுவதாகவும், நாடார் மகாஜன சங்கத்திலிருந்து வந்த லட்டரும், விருதுநகர் ராவ்பகதூர் டி. ரத்தினசாமி நாடார் அவர்களின் வாசகசாலையிலிருந்து வந்த தந்தியும் சபை முன் படிக்கப்பட்டது.

முடிவுரையாக அக்கிராசனாதிபதியவர்கள் முன்னர் பேசிய நால்வர் கருத்துக்களையும் தழுவி கல்வியே யாவற்றிலும் சிறந்தது என்பதை வற்புறுத்தி ஜாதி மதச் சண்டையை ஒழித்து நமது இந்தியாவில் ஐக்கியம் ஏற்பட்டு பரஸ்பரம் ஒவ்வொரு வகுப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமாயின் கல்வியில் விருத்தியடைய வேண்டுமென்றும், பிரகாசமான விளக்காக விருந்தாலும் தூண்டுகோல் ஒன்று அவசியம் வேண்டுமென்பதற்கிணங்க இத்தகைய வாசகசாலைகள் இன்றியமையாதன என்பதாகவும் அழுத்தமாக எடுத்துரைத்ததோடு, பெரியார் ஷண்முகவேல் நாடார் பிறந்த பெருமையும், கல்வித் திறமையில் அவர் காட்டிய ஊக்கமும், பொது நலத்திற்காக அவர் செய்த தியாகங்களையும், வர்த்தகத் துறையிலிருந்த அவரது தேர்ச்சியையும் புகழ்ந்து, அவரது அகால மரணத்திற்காக மிகவும் விசனித்து இறுதியாக வாசகசாலை நீடூழி வாழ வேண்டுமெனப் பிரார்த்தித்து சொற்பொழிவை முடித்தார்கள்.

இறுதியாக ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு அக்ராசனத் தலைவருக்கும், வரவேற்புத் தலைவருக்கும் புஷ்பஹாரங்கள் சூட்டி நிறைவு விழா சிறப்பாக நிறைவேறியது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்.)

ஒரு பிராணியைக் கொல்லுதலினால் அது தன் தாழ்ந்த ஜென்மத்திலிருந்து உயர்ந்த ஜென்மம் அடையும் வழியில் அதைத் தடுக்கிறீர்கள். ஆசையால் ஒன்றையும் கொல்ல வேண்டாம்.

ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் அதிகாரத்தினாலாவது, பலவந்தத்தினாலாவது, மோசத்தினாலாவது பிடுங்கிக் கொள்ளக்கூடாது.

வாக்குச் சுத்தத்தினின்றே மனச் சுத்தமுண்டாகிறதனால் பொய் சொல்லுவது, அவதூறு பேசுவது வேண்டாம்.

புத்தியை மயக்கும் பானங்களையும், மருந்துகளையும் விலக்குங்கள். சௌக்கியமான உடம்பும் தெளிவான மனதும் உடையவர்களுக்குத் திராக்ஷை ரசம் வேண்டியதில்லை.

மறு மாதரைக் கனவிலும் நினைக்க வேண்டாம். வேறு அநீதியான சிற்றின்பங்களினின்றும் விலகுங்கள்.

இவ்விதமாக புத்தர் தாய், தந்தை, குழந்தை, நேசர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப் பேசினார். விஷயங்களினின்றும் தம் மனதை விடுவிக்க முடியாதவர்கள் தான தருமங்களைச் செய்து கொண்டு சுத்தமும், நிராசையும், பொறுமையும், கருணையும் உள்ளவராயிருந்து உயிர்களையெல்லாம் தன்னுயிர்போல் நேசித்துக் கொண்டு எப்படி வாழலாமென்பதைப் பற்றிச் சொன்னார். ஒருநாள் காலையில் ராஜகிருகத்தில் வேணு வனத்தருகில் அவர் உட்கார்ந்து கொண்டிருக்கையில் சிங்காலனென்ற குடியானவன் ஸ்நானம் செய்து பூமிக்கும், ஆகாயத்திற்கும், நான்கு திக்குகட்கும் வணங்கி அவ்வாறு திக்குகட்கு அரிசியை வாரி இறைத்ததைக் கண்டு நண்பனே! ஏன் இப்படி வணங்குகிறாய் என்று கேட்க, அவன் ஐயா! இது எங்கள் வழக்கம்; ஒவ்வொரு காலையிலும் வேலையாரம்பிக்கு முன் ஆகாயம் பூமி நான்கு திக்குகளினின்றும் தீமையை விலக்க இவ்விதம் செய்ய எம் முன்னோர்கள் கற்பித்தார்கள் என்றான். புத்தர் நண்பனே! அரிசியை இறைக்க வேண்டாம்; எல்லார்க்கும் அன்பான எண்ணங்களையும், செய்கைகளையும் வாரி இறை; சூரியன் உதிக்கும் கிழக்கைப்போல் தாய் தந்தையர்களுக்கும், உயர்ந்த வஸ்துக்களைக் கொடுக்கும் தெற்கைப் போல் ஆசிரியர்க்கும், ஒவ்வொரு தினத்தின் முடிவிலும் சூரியன் அழகாயும், சாந்தமாயும் பிரகாசிக்கும் மேற்கைப்போல் மனைவி குழந்தைகட்கும், வடக்கைப்போல் சினேகிதர்கட்கும் பந்துக்களுக்கும் கீழேயுள்ள தாழ்ந்த பிராணிகளுக்கும் மேலேயுள்ள தேவர்களுக்கும் மகாத்மாக்களுக்கும் அன்பான எண்ணங்களையும், செய்கைகளையும் வாரி இறை; அப்பொழுது ஆறு ஸ்தானங்களும் பத்திரமாயிருக்கும்; தீங்கெல்லாம் பறக்கும் என்றார். இப்படி அவரவர் சக்திக்குத் தக்கபடி உண்மையைப் புகட்டினார். ஆனால் அவரது சிஷ்யர்களுக்கோ அவர்கள் உண்டுடுத்து வாழ வேண்டிய விதத்தைப் பற்றியும், தியானஞ் செய்ய வேண்டிய வழிகளைப்பற்றியும், இன்னும் அநேக விஷயங்களைப்பற்றியும் சொன்னார்.

இவ்விதம் அவ்விரவு முழுவதும் தர்மத்தைப் போதித்தார். அங்கு வந்திருந்த எல்லோரும் ஒருவராவது உறங்காமல் சந்தோஷத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் முடித்தவுடன் அரசன் எழுந்து அவரை வணங்கி அவர் காலை முத்தமிட்டு குருநாதா! உன் சீடர்களில் எல்லார்க்கும் தாழ்ந்தவனாக என்னை எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன் என்றான். யசோதரை முத்தங்களித்து பகவன் உமது வாக்காகிய அரசை ராகுல (மக)னுக்குக் கொடுக்க வேண்டுகிறேன் என்றாள். இப்படி மூவரும் அன்றிரவு நல்ல மார்க்கத்தை அடைந்தார்கள்.

### முடிவுரை.

அன்பர்களே! புத்தர் மனிதர் மேலும், மற்ற ஜீவர்கள் மேலும் வைத்துள்ள அன்பினாலே தம்முடைய திரண்ட செல்வங்களையும், பெரிய தேசத்தையும் இழந்ததினால் அவர் பெரிய தியாகியானார். அவர் கொள்கையின் மீதுள்ள பிடிப்பால் யாமிதைப் பல பெரியார் எழுதிய சரித்திரங்களைக் கொண்டு எழுதி வந்தோம். அவருடைய சரித்திரம இத்துடன் முடிகிறது. அவர் வெகு காலம் ஜீவித்திருந்து கங்கை நதியாயும் ஊர்களிலெல்லாம் நடந்து சென்று ஏழையென்றும், செல்வனென்றும், உயர்ந்தவனென்றும், தாழ்ந்தவனென்றும் பாராமல் எல்லார்க்கும் தர்மத்தைப் போதித்து, போகிற விடமெங்கும் சாந்தமும், இன்பமும், மனவமைதியும் விளைவித்துக் கொண்டு சென்று கடைசியில் எண்பதாவது வயதில் மெதுவாக இவ்வுலகினின்றும் பிரிந்தார் என்று தெரிய வருகிறது. மனிதரது துன்பத்தில் அவருக்கிருந்த அளவற்ற கருணையும், லோக முழுதுக்கும் பரவிய அவரது அன்பும், மனிதரது நற்கதியைப் பற்றி அவருக்கிருந்த எல்லையில்லா நம்பிக்கையும், இப்பூமியின் சரித்திரத்தில் ஒப்புயர்வாய் விளங்கும் அவரது வாழ்வும், இதை வாசிப்பவரது வாழ் நாட்களின் மதியில் அவர்களுக்குண்டாகிற கஷ்டங்களிலிருந்து தேறுதலைக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பிரிவு-6-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி 'நவஜீவன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய வாழ்க்கை விபரமாவது:—

என்னுடைய வாழ்நாளில் பிரம்மச்சரிய ஆச்சிரமத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் தீவிரமாக யோசித்த சந்தர்ப்பத்திற்கு வந்துவிட்டேன். எனக்கு விவாகமானது முதல் ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டுமென்றும் ஸத்தியத்தை நேசிப்பதில் சம்சாரத்தை நேசிப்பது ஒரு அம்சந்தானென்றும் நான் நினைத்து வந்தேன். என்னுடைய சம்சாரத்தின் விஷயத்தில்கூட பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணம் தென்னாப்பிரிக்காவில் தான் எனக்கு உதயமாயிற்று. எந்த சந்தர்ப்பத்தினால், அல்லது எந்தப் புத்தகத்தைப் படித்ததனால் என்னுடைய புத்தியில் இந்த எண்ணம் உண்டாயிற்றென்று இப்பொழுது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. நான் ஏற்கெனவே பிரஸ்தாபித்திருக்கும் ராய்சந்த்பாயின் செல்வாக்கே இதற்கு முக்கிய காரணமென்பது என்னுடைய ஞாபகம். அவருடன் நான் செய்த சம்பாஷணையின் விவரம் இன்னும் என் ஞாபகத்திலிருந்து வருகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் மிஸஸ் கிளாட்ஸ்டனுடைய பதிபக்தியை அவரிடத்தில் நான் சிலாகித்துச் சொன்னேன். மிஸ்டர் கிளாட்ஸ்டன் காமன்ஸ் சபையில் வேலையாக இருக்கும் காலத்திலும் அவருக்குத் தேத்தண்ணீரைத் தானே தயாரிக்க வேண்டுமென்று அவருடைய மனைவி வற்புறுத்துவாரென்றும், இந்தப் பிரபல தம்பதிகளுக்குள் இது வழக்கமாக ஏற்பட்டு, அவர்களுக்குக் கிரமமாக இருக்கும் சம்பிரதாயம் ஏற்பட்டு விட்டதென்றும் நான் படித்திருந்தேன். அதை மேலே சொன்ன பிரஸ்தாபித்த கவியினிடம் தெரிவித்து, இவ்வாழ்க்கையின் அன்பைச் சிலாகித்துப் பேசினேன்.

"பின்னிரண்டில் எந்த அன்பை நீங்கள் சிலாகிக்கிறீர்கள்? மிஸஸ் கிளாட்ஸ்டன் தமது கணவனை தாம் மனைவியென்றவரையில் நேசித்ததைச் சிலாகிக்கிறீர்களா? அல்லது அந்த பந்தத்தவ முறைக்கு எவ்வித சம்பந்தமுமில்லாமல் மிஸ்டர் கிளாட்ஸ்டனிடத்தில் விசுவாசத்துடன் அவர் ஊழியம் செய்துவந்ததைச் சிலாகிக்கிறீர்களா?" என்று அவர் என்னைக் கேட்டார். மேலும் "மிஸஸ் கிளாட்ஸ்டனுடைய அம்மாதுவானவள் அவருடைய மனைவியாக இல்லாமல் அவருடைய சகோதரியாகவாவது அல்லது அவரிடத்தில் பரம விசுவாசமுள்ள அவருடைய வேலைக்காரியாகவாவது இருந்து, அதே விசுவாசத்துடன் அவருக்குத் தொண்டுசெய்துவந்ததாக வைத்துக்கொள்ளுவோம். அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? இவ்விதம் பிராதாக்களிடத்தில் பக்ஷமுள்ள சகோதரிகளும், எஜமானர்களிடத்தில் பக்தியுள்ள வேலைக்காரிகளுமிருந்து வரவில்லையா? உங்களுடைய வேலைக்காரர்களில் ஒருவன் உங்களிடத்தில் விசேஷ பக்தியுடையவனாயிருந்தானென்று வைத்துக் கொள்ளுவோம். மிஸஸ் கிளாட்ஸ்டன் விஷயத்தில் நீங்கள் திருப்தியடைந்ததுபோல் அவன் விஷயத்திலும் நீங்கள் திருப்தியடைவீர்களா? இந்த விஷயத்தை யோசித்துப் பாருங்கள்" என்று சொன்னார்.

ராய்சந்த் பாய்க்கு விவாகமாகியிருந்தது. அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது சற்று எனக்கு கர்ணகடூரமாகத்தான் இருந்தது. ஆயினும் என்னுடைய ஹிருதயத்தில் அவைகள் ஊன்றிப்பதிந்துவிட்டன. மனைவியினுடைய பக்தியைக்காட்டிலும் வேலைக்காரருடைய பக்தியானது ஆயிரமடங்கு மேலானதென்று நான் நினைத்தேன். மனைவி புருஷனிடத்தில் பக்திகாட்டி வருவதில் அதிசயமொன்றுமில்லை, அவர்களிருவருக்குள்ளும் பிரிந்துபோகக்கூடாத ஒருகட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மனைவி பக்தியுடையவளாக இருப்பது சகஜம்தான். ஆனால் எஜமானிடத்தில் வேலைக்காரனுக்கு அவ்விதமே பக்தியிருக்கும்படி செய்ய விசேஷ முயற்சி வேண்டும். கவி தெரிவித்த அபிப்பிராயமானது வரவர என் மனதில் பதிந்துவந்தது.

ஆகவே இனி என்னுடைய சம்சாரத்தினிடத்தில் நான் எவ்வித சம்பந்தத்தை வைத்துக்கொள்ள வேண்டும்? என்னுடைய ஆசையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்? என்னுடைய ஆசையைத் தீர்த்துக்கொள்ள அவளை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளுவதால் அவளிடத்தில எனக்குள்ள விசுவாசத்தைக் காட்டிக்கொள்ளுவதாகிவிடுமா? நான் மிருக ஆசைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் வரையில் என்னுடைய அன்பானது ஒரு பைசாக்கூட பெறாது. எனக்கு இந்த மிருக ஆசை ஏற்படும்படி என்னுடைய மனைவி எக்காலத்திலும் என்னைத் தூண்டியதில்லையென்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் எனக்கு விருப்பமிருந்தால் பிரம்மச்சரிய ஆசிரமத்தை ஏற்றுக்கொள்ளுவது எனக்கு சுலபமானதாக இருந்தது. எனக்கு திடசித்தம ஏற்படாததும் லௌகீக ஆசையில் இருந்த பற்றுமே இதற்கு இடையூறாகவிருந்தது.

என்னுடைய மனச்சாக்ஷி என்னைத் தூண்டிவிட்டும் இருமுறை என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. என்னுடைய நோக்கமானது உயர்ந்ததாக இல்லாததால் என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. இனி குழந்தைகள் பிறக்காமல் தடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய நோக்கமாக இருந்தது. நான் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் விதத்தைப் பற்றிப் படித்திருந்தேன். மருந்துகளை உபயோகிக்கவேண்டுமென்பதைப்பற்றிய அத்தியாயத்தில் பிரஜா உற்பத்தியை கட்டுப்படுத்த பிரசாரத்தையும் குறிப்பிட்டிருக்கிறேன். அது தாற்காலிகமாக என்மனதில் ஒருவித உணர்ச்சியை உண்டுபண்ணியபோதிலும், மிஸ்டர் ஹில் என்பவர் அவருடைய முறைகளை எதிர்த்து, தன்னடக்கத்தினால இந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமென்று சொல்லியிருந்தது நியாயமானதென்று என் புத்தியில் பதிந்திருந்தது. அதிகக் குழந்தைகள் பிறப்பதில் எனக்கு இஷ்டமில்லாததால் என்னுடைய சரீர ஆசையை அடக்கிக்கொண்டேன். இதில் ஏற்பட்ட கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவல்ல. நானும் என் மனைவியும் தனித்தனியான படுக்கைகளில் படுத்துக்கொள்ள ஆரம்பித்தோம். வேலை செய்து களைத்துப்போன பிறகே படுக்கைக்குச் செல்லுவதென்று நான் சங்கற்பித்துக்கொண்டேன். இந்த முயற்சிகளெல்லாம் அதிகப் பலனைக் கொடுக்கவில்லை. இவைகளில் எனக்கு ஏற்பட்ட தோல்வியே முடிவில் நான் இதில் வெற்றி பெறுவதற்கு அனுகூலமாக இருந்தது.

1906-ம் வருஷத்தில்தான் நான் உறுதியாக இந்தக் கொள்கையைக் கைக்கொள்ள சாத்தியப்பட்டது. அப்பொழுது சத்தியாக்கிரகம் ஆரம்பமாகவில்லை. அதைப்பற்றிய சிந்தனையும் எனக்கு அப்பொழுது இல்லை. போயர் யுத்தத்திற்குப்பிறகு நேட்டாலில் ஸுலு கலகம் ஏற்பட்ட காலத்தில்தான் ஜோஹன்ஸ்பர்கில் வக்கீல் தொழில் செய்து கொண்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் நேட்டாலில் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் நினைத்தேன். என்னுடைய உதவியை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்ட விவரத்தை அடுத்த அத்தியாயத்தில் காணலாம். ஆனால் அந்த வேலையானது தன்னடக்க முயற்சியைப்பற்றி என்னை சிந்திக்கச் செய்தது. என்னுடைய எண்ணங்களைப்பற்றி என்னுடைய சகோதர ஊழியர்களிடம் நான் விவாதித்து வந்தேன். பிள்ளைகளைப் பெற்று அவைகளை சம்ரக்ஷிப்பதற்கும் பொது ஊழியத்திற்கும் பொருத்தமில்லையென்ற உறுதியான புத்தி எனக்கு ஏற்பட்டது. கலகத்தை அடக்குவதற்காக என்னாலியன்ற கைங்கரியத்தைச் செய்ய ஜோஹன்ஸ்பர்கில் இருந்த என்னுடைய ஜாகையைக் கலைக்கவேண்டியிருந்தது. நான் கவர்ன்மெண்டுக்கு உதவி செய்வதாகச் சொன்ன ஒரு மாதத்திற்குள் நான் வெகு நன்றாக அலங்கரித்துவைத்திருந்த வீட்டை நான் கைவிட வேண்டியதாயிற்று. என்னுடைய சம்சாரத்தையும், குழந்தைகளையும் போனிக்ஸுக்கு அழைத்துப்போய், நேட்டால் படையுடன் சேர்ந்திருந்த இந்திய ஆம்பு என்ற படைக்குத் தலைமை வகிக்க வேண்டியதாயிற்று. அந்தக்காலத்தில் பல சங்கடமான சந்தர்ப்பங்களில் நாங்கள் செல்லவேண்டியதாயிருந்தபோது, பொதுஜன சமூகத்திற்கு இவ்விதம் நான் ஊழியம் செய்யவேண்டுமானால் குழந்தைகளுக்கும், செல்வத்திற்கும் ஆசைப்படுவதை விட்டு வானப்பிரஸ்தனாகிவிட வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

கலகமானது 6-வாரங்களுக்கு அதிகமாக கலை வைக்கவில்லை. இருந்தாலும் என்னுடைய வாழ்நாளில் இந்த சொற்பகாலம் வெகு விசேஷமானதென்று சொல்லவேண்டும். பிரதிக்ஞைகளைக் காப்பாற்றவேண்டிய அவசியம் முன்னிலும் அதிகமாக எனக்குப் புலப்பட்டது. பிரதிக்ஞையானது உண்மையான சுதந்திரக்கோட்டையின் கதவை அடைப்பதற்குப் பதிலாகத் திறந்துவிடுகிறதென்று நான் கண்டுகொண்டேன். எனக்கு திடபுத்தியில்லாததாலும், என்னிடத்திலாவது, ஆண்டவனுடைய கருணையிலாவது எனக்கு நம்பிக்கையில்லாமல் சந்தேகமாகிய ஸாகரத்தில் நான் அலைக்கப்பட்டிருந்ததாலும இதுவரையில் என்னுடைய முயற்சி பலிக்கவில்லை. பிரதிக்ஞை செய்துகொள்ள மனிதர்கள் மறுப்பதால் அவர்கள் தூண்டுதலுக்கு ஆளாகிறார்களென்றும், ஒரு பிரதிக்ஞையில்கட்டுப்பட்டிருப்பதுதான் உண்மையான ஆபத்தினால் விரத விவாக தர்மத்தை அனுஷ்டிப்பதாகுமென்றும் நான அறிந்தேன். "ஒரு காரியத்தைச்செய்ய வேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தபோதிலும், அதைச் செய்வதாக நான் பிரதிக்ஞை செய்து

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்வாழ்வின் முதற்படி.

(முன் தொடர்ச்சி.)

இனிப்பான தின்பண்டங்கள், கொழுப்பான பதார்த்தங்கள், தேயிலை காப்பிப்பானங்கள் ஆகியஇவைகள் வயிறு கொள்ளும் அளவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே தின்னவும் குடிக்கவும் படுகின்றன. பிறகுங்கள். பட்சணாதிகளை வயிற்றின் மாயிக்கு நிறைவதையிரப்புவோருமுண்டு. சாப்பிட்டானதும் பத்திரிகை படிக்கலும், சுருட்டுக் குடித்தலும், பிறகு சாமான் அசுத்தம் செய்த அவைகளைப் பிறர் சுத்தம் செய்ய விட்டு மோட்டார் வண்டியிலோ, குதிரை வண்டியிலோ அல்லது மனிதர் இழுக்கும் வண்டியிலோ உத்தியோகம் பார்க்கவோ, சொந்த வேலைக்கோ கச்சேரி செல்லுதல், இடையிடையே சிற்றுண்டி, சாப்பாடு, காப்பி பல முறை. இரவானதும் சீட்டாட்டம் சங்கீதக் கச்சேரி. நாடகம், வேடிக்கைப் பேச்சு. மறுபடியும் இரவு போஜனம்; பஞ்சணை மெத்தை.

பணம் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதற்குத் தகுந்தாற்போல், மேற்கண்ட வாழ்வு முறையில் சிற்சில ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். இவ்வாறு காலங் கழிக்கும் ஒருவன் முகவெட்டும், இனிய சுபாவமும் உள்ளவனாகவுமிருந்தால், அவன் "நல்லவன்" என்றும் "நல்வாழ்வு நடத்துகிறான்" என்றும் சாதாரணமாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் உண்மையில் அவன் நல்லவனா? அவனுடைய வாழ்வு நல்வாழ்வா? பிறருக்கு நன்மை செய்வோனுடைய வாழ்வை யே நல்வாழ்வு என்னலாம். இத்தகைய வாழ்க்கை வழக்கமாய்ப் போன ஒருவன் பிறருக்கு நன்மை செய்ய முடியுமா? நன்மை செய்வதற்கு முன்னால் அவன் தீமை செய்வதை நிறுத்தவல்லவா வேண்டும்? அவன் இத்தகைய வாழ்வு நடத்துவதால் எவ்வளவு பேருக்கு எவ்வளவு கஷ்டம் கொடுக்கிறான் என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். அவனுக்கும் நல்வாழ்வுக்கும் வெகுதூரம் என்பதைக் கண்டு கொள்வீர்கள். பிறருக்குச் செய்யும் தீமைகளை விட்டு நீங்குவதற்கே அவன் எவ்வளவோ தீரச்செயல்கள் புரிந்தாக வேண்டும். அவன் பஞ்சணை மெத்தைக்குப் பதிலாக ஒரு பாயில் படுத்துறங்கலாம். தன்னுடைய உடைகளைத் தானே துவைத்துச் சுத்தம் செய்து கொள்ளலாம். எளிய உணவை மிதமாக உட்கொள்ளலாம். தன்னுடைய வேலைகளையெல்லாம் தானே செய்து கொள்ளலாம். இதனாலெல்லாம் அவனுடைய உடலும் உரம்பெறும்; ஒழுக்கமும் நலம் பெறும். தனக்காக இந்த வேலைகளையெல்லாம் செய்வோர் எவ்வளவு கஷ்டமான நிலைமையில் வேலை செய்கிறார்களென்றும், சில சமயங்களில் தன்னையே பகைக்கிறார்களென்றும் அவனுக்குத் தெரியும். ஆயினும் அவன் அத்தீமைகளைச் செய்யாதொழிவதில்லை. இத்தகையவன் ஒருவனை "நல்லவன்" என்றும் "நல்வாழ்க்கை" நடத்துகிறான் என்றும் கூறுதல் எவ்வாறு பொருந்தும்?

இந்த நிமிடத்தில் இதை எழுதும் நானும் இதைப் படிக்கப்போகும் நீங்களும் வேண்டிய அளவு சுத்தமான, புஷ்டியான உணவுப் பொருள்களைப் பெற்றுள்ளோம். அவ்வாறே மூச்சு விடத் தூய காற்றும், மழைக்கும் கோடைக்கும் ஏற்ற உடைகளும், கண்டு களிக்கப் பலவகை வேடிக்கை விநோதங்களும், பொழுது போக்குக்கு விளையாட்டுகளும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பகலில் ஓய்வெடுத்துக் கொள்ளச் சாவகாசமும் இரவில் தடங்கலற்ற நித்திரையும் நமக்குண்டு. நமக்கருகிலேயே வசிக்கும் தொழிலாளி வகுப்பினருக்கோ உண்பதற்குப் போதிய உணவில்லை; சுகாதாரத்திற்கேற்ற வாசஸ்தலமில்லை; குளிருக்கு உடையில்லை; பொழுது போக்கில்லை; விளையாட்டில்லை; ஓய்வெடுத்துக் கொள்ள நேரமுங்கிடையாது. கிழவர்களும், குழந்தைகளும், ஸ்திரீகளும் உழைத்து உழைத்து மெலிகின்றனர்; பலவகை நோய்கள் பீடிக்கின்றன. அவர்களுடைய வாழ்நாள் முழுதும் நமக்

[...]த்தி செய்வதிலேயே கழிந்து போகின்றது. அப்பொருள்கள் நமக்கு உயிர் வாழ அவசியமானவையல்ல; அதிகப்படியானவை. அவர்களுக்கோ உயிர்வாழ்வதற்கு அவசியமான பொருள்களும் போதிய அளவு கிடைப்பதில்லை. எனவே, நான் சொல்கிறேன்:—ஜீவகாருண்ய முள்ளவன் சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்க விரும்புபவன், நீதி, அநீதி என்னும் உணர்ச்சியுள்ளவன் எவனும் முதன்மையாகத் தன் வாழ்க்கை முறையை மாற்ற உறுதி கொண்டு சுகபோகப் பொருள்களை உபயோகப் படுத்துவதை உடனே நிறுத்திப் போடுதல் இன்றியமையாதது.

புகையிலைச் சுருட்டு செய்யும் தொழிலாளரின் உடம்பு விரைவில் கெட்டுப் போகிறது என்பதை அறிந்த ஒருவன் உண்மையில் அத்தொழிலாளருக்கு இரங்கினானாயின் அவன் முதலில் செய்ய வேண்டுவதென்ன? சுருட்டுக் குடித்தலை விட்டுவிடுவதே யன்றோ? சுகானுபவப் பொருள் ஒவ்வொன்றின் விஷயமும் இப்படித்தான். உயிர் வாழ்தற்கு இன்றியமையாத சில பொருள்கள் உண்டு. உதாரணமாக, ரொட்டி செய்தல் கிரமமக் கஷ்டமான வேலை தான். ஆனால் தற்காலத்தின் சமுதாய நிலைமை அடியோடு மாறும்வரை ரொட்டி வாங்குதல் இன்றியமையாததொன்று. (இது ஐரோப்பாவின் நிலையை யொட்டிக் கூறியது.) ஆனால் முற்றும் அநாவசியமானவையும், அதிகப்படியானவையுமான சுகானுபவப் பொருள்கள் விஷயத்தில் நாம் ஒரே முடிவுக்குத்தான் வரமுடியும். அப்பொருள்கள் உற்பத்தி செய்யும்தொழிலாளரிடம் நமக்கு இரக்கம் இருக்குமாயின் அப்பொருள்களை நாம் உபயோகிக்க மாட்டோம்.

ஆனால் இக்காலத்து மனிதர் புதிய புதிய வாதங்களை உண்டு பண்ணியிருக்கிறார்கள். சுகாநுபவப் பொருள்களை உபயோகியாதிருத்தல் அவசியமன்றென அவர்கள் கூறுகின்றனர். இவர்களுடைய கொள்கையின்படி, ஒருவன் தொழிலாளரின் நிலைமைக்கு இரங்கலாம்; அவர்களுக்காகப் பிரசங்கங்கள் செய்யலாம்; புத்தகங்கள் எழுதலாம்; ஆயினும் அவர்களின் அழிவுக்குக் காரணமாயுள்ள உழைப்பினால் உற்பத்தியாகும் பொருள்களை உபயோகப் படுத்தலாம்! "தொழிலாளர் என்னவோ வேலை செய்கிறார்கள் அவர்கள் உழைப்பின் பயனை நான் அநுபவியாவிடின் வேறு யாரேனும் அநுபவிக்கப் போகிறார்கள். பின்னர் நான் அநுபவித்தினால் என்ன கெடுதல்?" என்பது ஒரு வாதம். "சாராயம் தீமை செய்யுமென்பது உண்மைதான். ஆனால் நான் குடிக்காவிடின் வேறு யாரேனும் குடித்துவிடுவார்கள். ஆதலின் நான் தான் குடித்துவிடுகிறேன் என்பது போலிருக்கிறது இவ்வாதம். இன்னும் ஒரு சாரார், சுகாநுபவப் பொருள்களை வாங்கி உபயோகிப்பதால் தொழிலாளருக்கு நாம் நன்மையே செய்வதாகச் சொல்கிறார்கள்! இதனால் உயிர் வாழ்வதற்கு அவர்களுக்குப் பணம் கொடுத்தவர்களாகிறோமாம்! நன்று! நன்று! அவர்களுக்குத் தீமை பயப்பதும் நமக்கு அநாவசியமானதுமான பொருள்களைச் செய்யச் சொல்வதாலன்றி வேறுவழியில் அவர்கள் உயிர் வாழ்வதற்கு உதவி செய்ய முடியாதல்லவா?

மூன்றாவது வாதம் இன்னும் விநோதமானது. இதுதான் வேலைப் பிரிவினைத் தத்துவம். ஒருமனிதன்என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், அரசாங்க உத்தியோகஸ்தனாயினும், நிலச்சுவான்தாரனாயினும், முதலாளியாயினும், வியாபாரியாயினும், மதகுருவாயினும் அவன் செய்யும் வேலை தொழிலாளர்களிடமிருந்து அவன் பெறும் உழைப்புக்கு ஈடாகி விடுகிறதாம். ஒருவன் அரசாங்கத்துக்கு ஊழியம் செய்கிறான். இன்னொருவன் கோயிலுக்கு ஊழியம் செய்கிறான். மூன்றாமவன் விஞ்ஞானத்துக்கும் நான்காமவன் கலைகளுக்குத் தொண்டு செய்கிறான். ஐந்தாமவன் மேற்சொன்னவர்கள் எல்லாருக்கும் ஊழியம் செய்கிறான். எல்லாரும் தங்கள் சமூகத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமளவுக்குத் திருப்பிக்கொடுத்து விடுவதாக நிச்சயமாய் எண்ணியிருக்கிறார்கள்! தங்கள் உழைப்பை அதிகப்படுத்தாமல் சுகாநுபவங்களை மட்டும்

திருநெல்வேலி ஜில்லா எரல்மாநகரின்கண் கண்கண்ட தெய்வமாய் திருவிளையாடல் புரியும் ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் தை அமாவாசை உற்சவம் வரும் 20உயன்று நடைபெறுவதாகும். பிரார்த்தனை செலுத்துபவர்களும், வரங்கோரி வருபவர்களுமாக பக்தகுழாங்கள் கூடுவார்கள் எனத்தெரிகிறது. அகில ஜனங்களும் தவறாது ஆண்டவன் சந்நிதானத்திற்கு வந்து பக்திப்பரவசங்கொண்டு முக்திநிலையடைய வேண்டுகின்றேன்.

கோ. சி. பச்சையநாடார்,

ஆத்தூர்குடி.

## தேவை.

அருப்புக்கோட்டை, நாடார் எலிமெண்டரி பாடசாலைக்கு தலைமை உபாத்தியாயர் பதவிக்கு, செக்கண்டரிகிரேடு அல்லது எலிமெண்டரி ஹையர் கிரேடு டிரெயிண்டு சர்டிபிக்கேட்டுள்ளவர் தேவை. சம்பளம் திறமைக்குத்தக்கபடி கொடுக்கப்படும். கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்:—

மானேஜர்,

நாடார் எலிமெண்ட்டரி பாடசாலை,

அருப்புக்கோட்டை.

[...]யாது அதிகப்படுத்திக் கொண்டேயிருக்கும் இவர்கள் தாங்கள் பதிலுக்குப் பதில் ஈடுசெய்து விடுவதாக எண்ணிக்கொண்டிருப்பது ஒரு மகத்தான அதிசயமாகும்.

ஆனால் மேற்சொன்ன மனிதர்களைத் தனித்தனியாகக்கேட்டால் ஒவ்வொருவரும் பிறர்மீது குறை கூறுவார்கள். நிலச்சுவான் தாரர்கள் தாங்கள் அநுபவிக்கு மளவுக்கு வேலை செய்யவில்லையென அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சொல்வார்கள். நிலச்சுவான் தாரர்கள் வியாபாரிகளைப்பற்றி இப்படியே சொல்வார்கள். ஆயினும் அவர்களில் எவருக்கும் தங்களைப்பற்றியவரை சமூகத்துக்குத் தகுந்த பதில் செய்து விடுகிறோமென்பதில் ஐயமே தோன்றுவதில்லை. அவர்கள் ஒரு கணநேரம் நின்று தங்கள் மனச்சான்று என்ன சொல்கிறதென்று செவிகொடுத்துக் கேட்பார்களாயின் தங்கள் வாதங்கள் எல்லாம் பொய்வாதங்கள் என்பதை உணர்வார்கள். தாங்கள் தொழிலாளரின் வாழ்வுக்கு இன்றியமையாதவர்களல்லரென்பதும், அவர்களுடைய உழைப்பின் பயனைத்தாங்கள் அநுபவிப்பது தங்களுக்கு வல்லமை இருப்பதனாலும், அவ்வுழைப்பின்றி வாழ முடியாதபடி பழக்கப்படுத்திக் கொண்டதனாலுமே யல்லாமல் "வேலைப் பிரிவினை"த் தத்துவம் என்பதெல்லாம் வெறும்பொய் என்பதும் அவர்களுக்குத் தெரியவரும்.

இந்தப் பொய் வாதங்கள் வீண் பிரமைகள், தொல்லைகள் எல்லாவற்றுக்கும் காரணம் ஒரு தப்பெண்ணமேயாகும். நல் வாழ்வுக்கு இன்றியமையாத முதன்மையான குணத்தைப் பெறாமல் நல்வாழ்க்கை நடத்திவிடலாம் என்ற தப்பெண்ணமே இவ்வளவுக்கும் காரணம். அத்தகைய இன்றியமையாத முதன்மையான குணம் புலனடக்கமேயாம்.

## ரூ100 முதல் ரூ1000

பிரதிமாதம் "அபூர்வ சம்பாத்ய முறைநூல்"என்ற புதிய புத்தகத்தைப் படித்து முடித்ததும் சம்பாதிக்கத் தொடங்கலாம். அபூர்வ முறைகளும் விசேஷ சமபாத்ய ரகஸ்யங்களும் அடங்கியுள்ளன. விலை அணா பனிரெண்டு. வி. பி. தபால்செலவு பிரத்தியேகம். வெளிநாட்டு நண்பர்கள் ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆர். சேஷன், எடிட்டர்,

ஸ்ரீரங்கம்,

திருச்சினாப்பள்ளி.

அபிமானம் என்பது அன்பு. பற்று எனவும் பொருள் பயக்கும்.

"அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு". உயிரும் உடம்பும் போன்று நின்று பொலிவதே அபிமானமாகும். வினையாலை அவமானமாகும். ஒரு குலம், குடி. தேசம் முன்னேற வேண்டுமாயின் அவ்வபிமானம் வேண்டும். குன்றக்குடி 1000 வீடுகள் அமையுள்ள ஒரு பிரதான நகரத்திற்கு 10 பேராவது உண்மை அபிமானிகள் வேண்டும். அப்பொழுதான் அது உயர்வாகும். இப்பதின்மரும் உண்மையுடைப்பாளிகளாயின் ஆயிரம் வீட்டாரையும் அபிமானிகளாகக் காட்டுவர். என்னே! நல்லாருக்குப் பெய்யுமழை எல்லோருக்குமுண்டன்றோ?

அபிமானிகளென்போர் தங்கருமம் பெரிதெனக் கொள்ளார். பிறர் கருமமே பெரிதாகக் கொள்வர். அவர், செய் கருமந்தொடங்குங்கால் மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண்துஞ்சார்; எவரெவரையும் பாரார்; அவமதிப்பங் கொள்ளார். இவ்விதம் கோரிய கருமத்தைச் செய்து முடிக்கும் திறத்தோரே க்ஷத்திரியராவர். அவர் முன் வைத்த காலைப் பின் வையார்.

ஒருவன் அந்தணர் குலத்திலாயினும், க்ஷத்திரியர் குலத்திலாயினும் தோன்றியிருப்பினும் உயர்வு கிடைத்து விடாது. அந்தந்தக் குலத்திற்கேற்ப ஒழுக்கங்களை அனுஷ்டிக்க வேண்டும். கிறிஸ்து மார்க்கத்திலொருவன் அக்குலன் அனுஷ்டானங்களை அநுசரிக்காவிடில் அவன் கிறிஸ்தவனாவனா? உயர் குடியிற் பிறந்தும் இழிகுடியின் ஒழுக்கங்களை மேற்கொள்ளுவானாயின் அவன் உயர் குடியோனாவனா? எக் குலமதத்திற்பிறந்தும் அக்குல மதத்தைத் தழுவி நடப்பவனே அக்குலத்தோனும், மதத்தோனுமாவன். அக்குல மதத்தின் மீதிருந்த பற்றுடையவனே அபிமானியாவன். இவ்விரண்டு மற்றவனை என்னென்று கூறுவதோ?

உலகத்தில் மக்களாய் ஜெனனமெடுத்தவருள்ளும் இருவகை யுண்டு. ஒன்று மக்கள், மற்றவர் மாக்கள். முந்தியவர் மேற்கண்டவைகள் யாவையும் அகங்கொள்வர்; பிறையவர் அதுகொள்ளார் புன்மாமுதலிலங்கு புள்ளிருக்குள்ள ஐயறிவுயிருள்ளும் மேம்பட்ட பகுத்தறிவு என்னும் ஆறுவதறிவு விளங்கப்பெற்றவர்கள் மானிடர்கள். இவ்வாறுவதறிவே மனவுணர்வு எனப்படும். இவ்வுணர்வு கொண்டவர்களையே "மக்கள்" என்ற படியில் வைக்கப்படுவர். இவன் தன்னுயிர் போன்று மன்னுயிரையும் பார்ப்பான்; இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும்; அவன் தனக்கென்று வாழான்; கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐம்பெரும் பாதகங்களுக்கும் அஞ்சுவான்; அவன் காணங்களெல்லாம் அன்புமயமாகப் பொலியும்; அவனே தெய்வம் ஒன்றுண்டு எனக் கண்டுணர்வான். இன்னோரன்னகுணமுடைய ஒருவனையே மனிதன் (மக்கள்) எனக் கூறலாம். இவனுக்கேமுத்தி வீட்டினும் பங்குண்டு. அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைபிடி என்னும் புருஷ குணங்கள் நான்கினையும் மேற்கொள்பவன் இவனே.

மற்றும் மனிதப் பிறவி பெற்றனர்களோருள்ளும் தங்கருமமே கண்ணும் அயலாரிடத்து பொறாமையும், அகங்காரமும், கோபமுமுடையோர் பலருளர். இன்னோரை மனிதச் சட்டம் பூண்ட ஐயறிவுயிரர் என இக்காலத்து ஆன்றோர் கூறுவர்.

"அன்பின் வழியதுயிர் நிலை—அஃதிலார்க்
கென்பு தோல்போர்த்த வுடம்பு"

என செந்நாப்போதாரும் கூறிப் போந்தார்.

"ஐம்பொறியும் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வனவேனு மன்னம் இட்டுண் மின்—தெய்வம்
ஒருவனே என்னவுணர வல்லீரேல்
அருவினைகளைந்தும் அறம்"

கி. மு. ம. மரியந்தோணிநாடார்,

வடக்கன்குளம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection